
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல. 390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல. 285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 12.11.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 316 பக்கங்கள் : 12

# தேர்தல் பிரசாரங்கள் நள்ளிரவுடன் நிறைவு

**கொழும்பு, நவம்பர் 12**

**பொதுத்தேர்தலுக்கான பிரசார நடவடிக் கைகள் நேற்று நள்ளிரவுடன் நிறைவடைந்தன என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் நேற்று நள்ளிரவுடன் நிறைவுக்கு வந்தன. இன்று நள்ளிரவு முதல் தேர்தல் தொகுதி வாரியாக நிறுவப்பட்டிருக்கும் தேர்தல் அலுவலகங்கள் மூடப்பட வேண்டும். ஆகவே, அனைத்து அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் அவர்களின் ஆதரவாளர்களும், இந்த சட்டங்களை பின்பற்றுவார்கள் என நம்புகின்றோம். சுதந்திரமான - நியாயமான தேர்தலை நடத்துவதற்கான ஆதரவை அனைவரும் வழங்க வேண்டும்.

இந்த அமைதிக்காலப் பகுதியில் 48 மணித்தியாலங்கள் தனிப்பட்ட முறையில் வாக்களிப்பது தொடர்பில் சிந்திக்கும் காலப்பகுதியாக இருப்பதால் சமூக ஊடகங்கள் இது தொடர்பில் பொறுப்புடன் செயல்பட வேண்டியது அவசியமாகும்.

அதேபோன்று தேர்தலை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன- என்றார். (அ)

## படைகளுக்கு தேவையான நிலமே உள்ளது



கொழும்பு, நவ. 12

நாம் கடந்த காலங்களில் காணிகளை விடுவித்தோம். இராணுவத்தினரின் தேவைக்கான காணிகளே தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன - இவ்வாறு கூறியுள்ளார் ரணில் தரப்பின் முன்னாள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த.

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாக ஜனாதிபதி அநுர 11

## புதிய அமைச்சரவை நவ. 21 பதவியேற்கும்

கொழும்பு, நவ. 12

பொதுத்தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றிபெறும் பட்சத்தில் புதிய அமைச்சரவை எதிர்வரும் 21ஆம் திகதி கடமையேற்கும் என்று தெரியவருகின்றது.

புதிய பாராளுமன்ற கூட்டத்தொடர் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகும்போது, பொதுத் தேர்தலில் வென்றவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக உறுதியேற்பார்கள். 11

## இடதுகை ஆள்காட்டி விரலில் இம்முறை மை பூச தீர்மானம்!

கொழும்பு, நவ. 12

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்களிப்பின் போது, வாக்காளர்களின் சிறிய விரலில் மை பூசப்படமாட்டாது என தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இடது கையின் ஆள்காட்டி விரலில் மை பூசப்படும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்நாயக்க 11

## 46 நாள்களில் 50 இராஜதந்திரிகளை சந்தித்த வெளிவிவகார அமைச்சர்!

கொழும்பு, நவ. 12

புதிய வெளிவிவகார அமைச்சர் 46 நாட்களுக்குள் 50 இற்கும் அதிகமான இராஜதந்திரிகளை சந்தித்து கலந்துரையாடியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் வெளிவிவகார அமைச்சராக கடமைகளை 11

## சுன்னாகம் அராஜகம்: நான்கு பொலிஸார் பணி இடைநீக்கம்!

யாழ்ப்பாணம், நவ. 12

சுன்னாகம் பொலிஸாரின் அராஜகத்தை தொடர்ந்து, குறித்த அராஜகத்தை மேற்கொண்ட பொலிஸாரான உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர், பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் மற்றும் இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் என நால்வர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர் 11

## வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் சங்குக்கு வாக்களிக்க ஆர்வம்

### சித்தார்த்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 12

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கணிசமான மக்கள் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் சங்கு சின்னத்துக்கு வாக்களிப்பதில் ஆர்வத்துடன் இருக்கிறார்கள் - இவ்வாறு பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் த. சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். 11

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்: பிள்ளையானை சி. ஐ. டியில் முன்னிலையாகுமாறு உத்தரவு

கொழும்பு, நவ. 11

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் பிள்ளையான் என்று அறியப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனை குற்றப் புலனாய்வு துறை (சி. ஐ. டி.) தலைமையகத்தில் முன்னிலையாக உத்தரவிடப்பட்டுள்ளது.

இதன்படி, இன்று செவ்வாய்க்கிழமை கொழும்பிலுள்ள தலைமையகத்துக்கு விசாரணைக்கு 11

## தமிழரின் வாக்குகளை அபகரிக்க ஜனாதிபதி அநுர அரசியல் நாடகம்

### சாடுகின்றார் செல்வம் அடைக்கலநாதன்

வவுனியா, நவ. 12

அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கும் நிலையில் அவர் தற்போது தெரிவித்து வரும் கருத்து தமிழ் மக்களின் வாக்குகளை அபகரிக்கும் அரசியல் நாடகம் என தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் நேற்று தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி பல கூட்டங்களில் 11

## சுமந்திரனிடம் கேள்வி; கூட்டத்தில் குழப்பநிலை!

**பு. கஜிந்தன்**

பரப்புரை கூட்டத்தில் சிலர் சுமந்திரனிடம் கேள்விகளை எழுப்ப முற்பட்டதால் அங்கு குழப்பம் ஏற்பட்டது.

நேற்றைய தினம் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பரப்புரை கூட்டம் சுழிபுரத்தில் நடைபெற்றது.

பரப்புரை கூட்டத்தில் சுமந்திரன் உரையாற்றிய பின்னர், அங்கிருந்த சிலர் கேள்விகளை எழுப்ப முயன்றனர். இன்போது குழப்பம் ஏற்பட்டது - இதைத் தொடர்ந்து அங்கு முறுகல் நிலை 11

## சத்தமின்றி இலங்கைக்கு வந்து திரும்பிய இஸ்ரேலின் பிரதிநிதி

கொழும்பு, நவ. 12

இஸ்ரேல் அரசாங்கத்தின் முக்கியஸ்தரான ராய் வக்னின் அண்மையில் இலங்கை வந்து பல உயர் தரப்பினரை சந்தித்து திரும்பியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

அறுகம்குடா தாக்குதல் தொடர்பான முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டு சில தினங்கள் கழித்தே அவர் இலங்கை வந்து திரும்பியுள்ளார்.

இலங்கை வந்த அவர் யார் யாரை சந்தித்தார், என்ன விடயம் பேசப்பட்டது, இந்தப் பேச்சில் எட்டப்பட்ட உடன்பாடுகள் என்ன என்பது தொடர்பான எந்தத் தகவலும் வெளியாகவில்லை. 11

## த. தே. ம. முன்னணியினரை மிரட்டிய பொலிஸார்

யாழ்ப்பாணம், நவ. 12

திருநெல்வேலியில் நேற்றைய தினம் துண்டுப்பிரசுரங்களை விநியோகத்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரை பொலிஸார் மிரட்டினர் என்று கூறப்படுகின்றது. இதனால், நேற்று அங்கு பரபரப்பு ஏற்பட்டது.


தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்றையதினம் திருநெல்வேலி பகுதியில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டிருந்தனர். இதன்போது அங்கு வந்த பொலிஸார் அவர்களை தடுத்து நிறுத்தினர் என்று கூறப்படுகின்றது. 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியில் குப்பை வீசுவோருக்கு எதிராக இனி சட்ட நடவடிக்கை

## 24 மணி நேரமும் சி. சி. ரீ. வி. கமெரா மூலம் கண்காணிப்பு

### யாழ். மாநகர சபை எச்சரிக்கை



யாழ்ப்பாணம், நவ. 12

யாழ்ப்பாணத்தில் வீதியில் குப்பை போடுபவர்களை இனங்கண்டு சட்டரீதியாக தண்டிக்கும் நடைமுறைய யாழ்ப்பாணம் மாநகர சபை ஆரம்பித்துள்ளது.

ஓட்டுமடம் சந்தியிலிருந்து வட்டுக்கோட்டை ஊடாக காரைநகர் செல்கின்ற வீதியில் விலங்கு கழிவுகள், மருத்துவ மனை கழிவுகள், தொழிற்சாலை கழிவுகள் என்பன தொடர்ச்சியாக கொட்டப்படுகின்றன. இதனால், அந்த பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன், கொட்டப்படும் கழிவுகளை உண்பதற்காக நாய்களும் அங்கு பெருகி வருகின்றன. இதனால், அடிக்கடி வீதி விபத்துகளும் இடம் பெறுகின்றன.

இதனால், அந்தப் பகுதியை சி. சி. ரீ. வி. கமெராக்கள் மூலம் 24 மணிநேரமும் கண்காணிப்பதற்கும் அவ்வாறு கழிவுகளை கொட்டுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் மாநகர சபை நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இதேவேளை, கழிவுகளை அந்தப் பகுதியிலுள்ள மீள் சுழற்சி நிலையத்துக்கு குப்பைகளை வழங்க முடியும் என்றும் யாழ். மாநகர சபை அறிவிப்பு பலகையும் வைத்துள்ளது.

(எ-05)

# வாக்காளர் அட்டைகளை இணையத்திலும் பெறலாம்

கொழும்பு, நவ. 12

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை கிடைக்காதவர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இ- சேவை இணையத்தளத்தில் வாக்காளர் அட்டைகளை பெற்றுக்கொள்ள முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை இருப்பது கட்டாயமானதல்ல . 2024 தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள செல்லுபடியான அடையாள அட்டையொன்றை வைத்துள்ள வாக்காளர் எவரும் தமக்கு குறித்தொதுக்கப்பட்ட வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி வாக்களிக்க முடியும்.

பொதுத்தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்கெடுப்பு நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ள நிலையில் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை தபால்மூல விநியோகம் இம்மாதம் 07 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிடைக்காதவர்கள் 2024.11.14 திகதிக்குள் தேருநர் இடாப்பில் தாம் பதிவு செய்துள்ள முகவரிக்குரிய பிரதேச தபால் நிலையத்துக்கு சென்று தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி தமக்குரிய வாக்காளர் அட்டைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

அதேபோல் நிகழ்நிலை முறைமை ஊடாக வாக்காளர் அட்டையின் பிரதியை பெற்றுக்கொள்ளும் வசதியளிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய https://eservices.elections.gov.lk என்ற தேர்தல் இ-சேவை இணையத்தளத்துக்குள் பிரவேசித்து அதிலுள்ள குடிமக்களுக்கு என்ற பகுதியில் இருக்கும் தேருநர் பதிவு விபரம் தேடல் என்ற இ- சேவையினுள் பிரவேசிக்க வேண்டும்.

தேசிய அடையாள அட்டையின் இலக்கத்தை உள்ளிட்டு தகவல்களை ஆராய வேண்டும். அதன் துணையுடன் கிடைக்கின்ற தகவல்களில் தேர்தல் நடவடிக்கைகளுக்கான தேருநர் பதிவு விபரம் - பாராளுமன்றத் தேர்தல் 2024 என்பதனுள் பிரவேசித்தல் வேண்டும்.

அப்போது 2024 பாராளுமன்றத் தேர்தலுக்காக பயன்படுத்தப்படும் இடாப்பில் தமது தேருநர் இடாப்பு பதிவு தகவல்களை பார்வையிட முடியும். அதன் பிறகு தமது கையடக்கத் தொலைபேசி இலக்கத்தை உள்ளிட்டு "வாக்காளர் அட்டை அச்சிடு" என்பதன் மூலம் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையை பதிவிறக்க முடியும்.

அத்துடன் தமது கைபேசிக்கு குறியீடு (OTP ) ஒன்று கிடைக்கப்பெறும் "Enter the code" என்று தோன்றும் இடத்தில் அக்குறியீட்டை உள்ளிட்டு தமது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையை பதிவிறக்கம் செய்துக் கொள்ள முடியும்.

வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை இருப்பது அவசியமற்றது. 2024 தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள செல்லுபடியான அடையாள அட்டையொன்றை வைத்துள்ள வாக்காளர் எவரும் தமக்கு குறித்தொதுக்கப்பட்ட வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி வாக்களிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# கிளிநொச்சியில் நேற்று நீரிழிவு பரிசோதனை

கிளிநொச்சி, நவ. 12

உலக நீரிழிவு நோய் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் நோயாளர்களை இனங்காணும் நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

பரந்தன் பகுதியில் கண்டாவளை பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்களில் பணிபுரிவோர் மற்றும் பேருந்துக்காக காத்து நின்ற பலரிடம் நீரிழிவு பரிசோதனை செய்யப்பட்டது.

நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு பரிசோதனை செய்யப்பட்டது.

இதன் மூலம் பல நீரிழிவு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். மாவட்ட தொற்றா நோய்ப் பிரிவின் மருத்துவர் க. ரஞ்சன் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

எதிர்வரும் 15ஆம் திகதி வரை உலக நீரிழிவு வாரமாக பிரகடனப்படுத்தி நோயாளர்கள் இனங்காணப்படவுள்ளனர்.

கண்டாவளை மருத்துவ மனை அதிகாரி பிரிவில் குறித்த வாரத்தில் 8.30 மணி வரை மக்கள் பரிசோதனையை மேற்கொண்டு தமது நீரிழிவு நோய் நிலைமையை அறிந்து கொள்ள முடியும்.

(ஐ)

# கிளிநொச்சியில் ஊடகவியலாளரிடம் கருத்தறிவு


கிளிநொச்சி, நவ. 12

பாராளுமன்ற தேர்தலின் கிளிநொச்சி மாவட்டத்தின் நிலை தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட ஊடகவியலாளர்களின் கருத்துகளை கேட்டறியும் முகமாக கிளிநொச்சி மாவட்ட ஊடகவியலாளர்களை சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் சந்தித்தனர்.

இதன்போது மாவட்டத்தின் தேர்தல் நிலைமை தொடர்பாக கேட்டறிந்து கொண்டனர்.

(ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
12.11.2024 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 26

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# யாழ். நகரில் ஜனாதிபதி அநுர விட்டுச் சென்ற செய்தி

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க நேற்றையதினம் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரத்துக்காக யாழ்ப்பாணம் வந்திருந்தார். யாழ். நகரில் அவர் உரையாற்றிய பிரசாரக் கூட்டத்தில் வடக்குக்கு வெளியில் இருந்து பல பஸ்களில் கூட்டிவரப்பட்ட மக்களும் கலந்து கொண்டனரெனக் கூறப்படுகிறது.

நாட்டின் ஜனாதிபதி கலந்து கொள்ளும் கூட்டத்தில் சொற்ப எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டால் மதிப்பாக இருக்காது என்பதால் தேசிய மக்கள் சக்தியின் செயல்பாட்டாளர்கள் வெளியில் இருந்து ஆட்களை அழைத்து வந்திருக்கலாம். பணம் கொடுத்துத்தான் அவர்களை அழைத்து வந்தார்களோ தெரியாது.

ஜனாதிபதி தேர்தலில் திஸநாயக்கவின் பிரசாரக்கூட்டங்களில் பெரும் எண்ணிக்கையில் மக்கள் கலந்து கொண்டார்கள். அந்தக் கூட்டங்களுக்குக்கூட பணமும் உணவும் கொடுத்து வெளியிடங்களில் இருந்து மக்கள் பஸ்களில் ஏற்றியிறக்கப்பட்ட பல சந்தர்ப்பங்களும் உண்டு. தேர்தல் அரசியல் என்று வந்துவிட்டால் "இது எல்லாம் சகஜமப்பா..." என்றாகிவிட்ட நிலையில் அதுவும் ஆட்சி அதிகாரத்துக்கு வந்துவிட்டால் கேட்கவா வேண்டும்.

ஜனாதிபதியாக பதவியேற்ற பிறகு அதுவும் குறிப்பாக தேசிய மக்கள் சக்தியின் தலைமைக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே. வி. பி.)வின் அரசியல்வாதிகள் இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் மேலும் குறிப்பாக அரசமைப்புக்கான 13ஆவது திருத்தம் தொடர்பில் எதிர்மறையான கருத்துகளை அண்மைய நாட்களில் வெளியிட்டுவந்த பின்புலத்தில் முதல் தடவையாக யாழ்ப்பாணத்துக்கு வந்த திஸநாயக்க அரசியல் தீர்வு குறித்து ஏதாவது கூறுவார் என்று எதிர்பார்த்தவர்களுக்கு ஏமாற்றமே கிடைத்தது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களும் தங்களுக்கு தமிழ் மக்கள் வாக்களிப்பதற்கு மனங்கொள்வதற்கு வசதியாக தங்கள் தலைவர் அரசியல் தீர்வு தொடர்பில் சில உறுதிமொழிகளை வழங்கினால் நன்றாக இருக்கும் என்று நிச்சயமாக எதிர்பார்த்திருப்பார்கள்.

ஆனால், ஜனாதிபதி அதைப்பற்றி எதையும் கூறாமல் இருப்பதில் மிகவும் 'கவனமாக' நடந்துகொண்டதை காணக்கூடியதாக இருந்தது. 2015 - 2019 'நல்லாட்சி' அரசாங்க காலத்தில் தொடங்கப்பட்ட அரசமைப்பு வரைவு செயன்முறைகளை தொடர்ந்து முன்னெடுத்து நிறைவுசெய்து அதன் மூலமாக புதிய அரசமைப்பை கொண்டுவந்து தேசிய இனப்பிரச்னை உட்பட நாடு எதிர்நோக்கும் முக்கியமான சகல பிரச்னைகளுக்கும் தீர்வைக் காணப்போவதாக ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் எழுத்தில் வழங்கிய வாக்குறுதியைக்கூட யாழ்ப்பாணத்தில் திருப்பி ஒப்புவிக்கவில்லை.

பதிலாக, அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் என்றும் பாதுகாப்பு தேவைக்காக இராணுவத்தினர் வசமிருக்கும் பொதுமக்களின் காணிகளை விடுவிக்கப் போவதாகவும் மாத்திரம் வெளியில் இருந்து அழைத்து வரப்பட்டவர்கள் உட்பட கூட்டத்தில் இருந்தவர்களுக்கு உறுதியளித்தார். பாராளுமன்ற தேர்தலுக்கு பிறகு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை அமைத்ததும் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களுடன் பேச்சுகளை நடத்தி தமிழர் பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு முயற்சி எடுப்போம் என்று ஒரு சாட்டுக்கேனும் கூறுவதற்கு அவர் விரும்பவில்லை.

ஆனால், ஜனாதிபதி திஸநாயக்கவின் அரசாங்கத்தின் ஒரேயோர் அமைச்சரான விஜித ஹேரத் பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றும் என்ற உறுதியான நம்பிக்கை தங்களுக்கு இருப்பதாகவும் தேசிய ஐக்கியத்தை சாதிப்பதற்காக தமிழ், முஸ்லிம் மக்களினால் பாராளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களைச் சேர்த்துக்கொண்டு தேசிய ஐக்கிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது குறித்து பரிசீலிக்கப்போவதாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் நேற்றைய தினம் கூறியிருக்கிறார். ஆனால், தேசிய இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பது குறித்து எதையும் அவர் கூறவில்லை.

தென்னிலங்கையில் தாங்கள் ஏற்படுத்தி வருவதாகக் கூறும் மாற்றத்துக்குள் சிறுபான்மை சமூகங்களின் குறிப்பாக தமிழ் மக்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடியதாக எந்த சிந்தனையையும் உள்ளடக்குவதில் நாட்டம் இருப்பதாக ஜனாதிபதியோ தேசிய மக்கள் சக்தியோ எந்த அறிகுறியையும் இதுவரையில் காண்பிக்கவில்லை.

சிறுபான்மை சமூகங்களின் அரசியல் அபிலாசைகளுக்கு எதிரான நிலைப்பாடுகளைக் கொண்ட தென்னிலங்கை அரசியல் சக்திகளை பகைத்துக்கொள்ளாத வழமையான அணுகுமுறையை கடைப்பிடிப்பதிலேயே 'புதிய அரசியல் கலாசாரம்' பற்றி பேசும் இவர்களும் அக்கறையாக இருக்கிறார்கள். இதுவே யாழ்ப்பாணம் வந்து திஸநாயக்க விட்டுச் சென்ற செய்தி.

தேசிய மக்கள் சக்தி வேட்பாளர்களுக்கு வாக்களிப்பதில் நாட்டம் கொண்ட தமிழ் வாக்காளர்கள் சிந்தித்துப் பார்த்து தங்கள் வாக்குரிமையை பயன்படுத்துவார்களாக!

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2024



"கூர்மையாகச்செவிமடுத்துக் கொண்டிருக்கும் விண்ணுடன் பேசுவதற்கான மண்ணின் இடையறாத முயற்சிகளே மரங்கள்."
- இரவீந்திரநாத் தாகூர் (வங்கக் கவிஞர்)

# சிறிய, நடுத்தர தொழில்துறைகளுக்கு சலுகை வழங்க அரசாங்கம் தீர்மானம்

கொழும்பு, நவ. 12

சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறைகளுக்கான சலுகை வழங்குவது குறித்து, நிதி மற்றும் பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ஜி. என். ஆர். டி அபொன்ஸ் மற்றும் இலங்கை வங்கிகள் சங்கம், நிதி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் அதிகாரிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்று திங்கட்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையினர் கடன் சுமையால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது.

பராட்டே சட்டத்தை (Parate Execution) அமுல்படுத்துவது தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் அது எதிர்வரும் டிசெம்பர் 15ஆம் திகதியுடன் காலாவதியாகிறது. இது தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து இக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

பொருளாதாரத்தின் உற்பத்தித் திறனை மேம்படுத்த வங்கி துறைக்கு வழங்கக்கூடிய ஆதரவு மற்றும் தற்போது சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறையினர் பெற்றுக் கொண்டுள்ள கடன்கள் குறித்தும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையினர் வங்கிகளில் பெற்ற கடன் தொடர்பான அறிக்கையொன்றைத் தயாரிக்கவும் இக்கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

தற்போது வங்கிகள் பராட்டே சட்டத்தின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையினருக்கு வழங்கப்பட்ட கடன்களை வசூலிப்பதை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளதுடன், அது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கை மத்திய வங்கியின் வங்கி கண்காணிப்பு பணிப்பாளர் ஆர். ஆர். எஸ். டி சில்வா ஜயதிலக, இலங்கை மத்திய வங்கியின் சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் ஏ. எம். ஏ. டி. அமரகோன், வரையறுக்கபட்ட இலங்கை வங்கிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் இந்திரஜித் போயகொட, யூனியன் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி டில்ஷான் ரொட்ரிகோ, சம்பத் வங்கியின் சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் மனோஜ் அக்மீமன, இலங்கை வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் சம்பத் பெரேரா, கொமர்ஷல் வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் நளின் சமரநாயக்க, ஹற்றன் நஷனல் வங்கியின் தலைமை மீட்பு மற்றும் புனர்வாழ்வு அதிகாரி நிரோஷ் பெரேரா, ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி பிங்குமால் தேவரதந்திரி ஆகியோரும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (ஐ)

# தந்தை செலுத்திய ஜீப் மோதி குழந்தை பலி!

கொழும்பு, நவ. 12

கொழும்பு - மருதானை புகையிரத குடியிருப்புக்கு முன்பாக தந்தை செலுத்திய ஜீப் வாகனத்தில் மோதி குழந்தை ஒன்று உயிரிழந்தார் மருதானை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

கொழும்பு, மருதானை பிரதேசத்தில் உள்ள புகையிரத குடியிருப்பில் வசித்து வந்த 3 வயது குழந்தையே உயிரிழந்தது.

உயிரிழந்த குழந்தையின் தந்தை தனது ஜீப் வாகனத்தை வீட்டுக்கு அருகில் நிறுத்துவதற்காக பின்பக்கமாக வாகனத்தை செலுத்திய போது, பின்னால் வந்த குழந்தை வாகனத்தில் மோதியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மருதானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர் -12 செவ்வாய்கிழமை
குரோதி வருடம் - ஐப்பசி 26
நல்ல நேரம் : 7.31 - 9.00
ராகு காலம் : 3.00 - 4.30
திதி : துவாதசி




**மேடம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். சேமிக்க வேண்டுமென்ற எண் ணம் வரும். காணாமல் போன முக்கிய ஆவணம் கிடைக்கும்.நல்ல வரவேற்பு கிடைக்கும்.

**இடபம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். உறவினர், நண்பர்களால் ஆதாயம் உண்டு. பழைய கடனில் ஒருபகுதியை பைசல் செய்வீர்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**மிதுனம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் எதையோ இழந்ததை போல ஒருவித கவலைகள் வந்து செல்லும். நண்பர்கள், உறவினர்கள் உங்களிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்வார்கள்.

**சிம்மம்**
பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. தாயார் ஆதரித்துப் பேசுவார். புதியவர்கள் அறிமுகமாவார்கள். வெளியூரில் இருந்து நல்லசெய்தி வரும்.

**கன்னி**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர், நண்பர்களுடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. எதிர்பாராத சந்திப்பு நிகழும்.

**துலாம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். ஆடம்பர செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள்.

**விருட்சிகம்**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்துநீங்கும். பணப்பற்றாக் குறையை சமாளிப்பீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும்.

**தனுசு**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வீடு மனை வாங்குவது விற்பது லாபகரமாக அமையும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும்.

**மகரம்**
கணவன்- மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். புதுமுடிவுகள் எடுப்பீர்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கோபம் குறையும். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கடந்த காலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாக பயன்படுத்தாமல் விட்டு விட்டோமே என்று அவ்வப்போது ஆதங்கப்படுவீர்கள்.

**மீனம்**
குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். வெளிவட் டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள்.

# "ஆசிரியரின் தொலைபேசியை பறித்து சுன்னாகம் பொலிஸார் அராஜகம்"

யாழ்ப்பாணம், நவ. 12

சுன்னாகம் பொலிஸாரின் அராஜகத்தை வன்மையாக கண்டிப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் தீபன் திலீசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,சுன்னாகம் பகுதியில் விபத்து ஒன்று இடம்பெற்ற போது அந்த இடத்துக்கு வருகை தந்த பொலிஸார், ஹயஸ்வாகனத்தில் வந்திருந்தவர்கள் மீது பெண்கள், ஆண்கள் எனப் பார்க்காமல் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாகவும் இரண்டு மாத குழந்தையை பற்றைக்குள் வீசியதாகவும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இந்தச் சம்பவம் இடம்பெற்று கொண்டிருக்கின்ற வேளையில் எங்களுடைய ஆசிரியர் சங்கத்தின் வலிகாமம் வலயத்தினுடைய பிரதிநிதியான நவநீசன் அந்த வழியால் வந்த பொழுது குறித்த சம்பவத்தை காணொலி எடுத்துள்ளார். பதில் பொலிஸ்மா அதிபரான பிரியந்த வீரசூரிய, பொலிஸாரின் அராஜகத்தை காணொலியாக பதிவு செய்ய முடியும் என சுற்றறிக்கை வெளியிட்டிருந்தார்.



இவ்வாறான சூழ்நிலையில் சுன்னாகம் பொலிஸ் நிலையம் என எழுதப்பட்ட நீல நிற ஓட்டோவில் சிவில் உடைக ளில் வந்த பொலிஸாரால் அவரது தொலைபேசி பறிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், அந்தப் பெண் பதிவு செய்த தொலைபேசியும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டு பற்றைக்குள் வீசப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நவநீசன் தனது தொலைபேசி பொலிஸாரால் பறிக்கப்பட்டுள்ளதாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையிலும், இதுவரை அவரது தொலைபேசி கொடுக்கப்படவில்லை.

பதில் பொலிஸ் மா அதிபர் வருகை தந்து புதிய பொலிஸ் நிலையத்தை திறந்து வைத்து சென்று சில மணி நேரத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றமை பொலிஸ் மா அதிபரின் சுற்றறிக்கையை சுன்னாகம் பொலிஸார் மீறுவதாக அமைந்துள்ளது.

ஆட்சி மாற்றங்கள் நடைபெற்றுள்ளதாகவும், இங்கே பொலிஸாரின் அராஜகங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக ஆட்சியாளர்கள் தெரிவித்தாலும் வடக்கு - கிழக்கில் மிகப் பெரிய அராஜகங்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதை நாங்கள் கண்கூடாக கண்டு கொண்டிருக்கின்றோம்.

ஆகவே, எமது தொழிற்சங்க உறுப்பினரிடம் இருந்து பறித்தெடுக்கப்பட்ட தொலைபேசி மிக விரைவாக வழங்கப்படவேண்டும். அநாகரிகமாகவும் அராஜகமாகவும் செயல்பட்ட பொலிஸாருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இல்லையேல் இலங்கை ஆசிரியர் சங்கம் அதற்கு எதிரான சில நடவடிக்கைகளை எடுக்கும் என்று இந்த இடத்தில் நாங்கள் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்"- என்றார்.

(எ-05)

# வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா





யாழ்ப்பாணம், நவ. 12

உலக சித்தங்கேணி ஒன்றியத்தின் அனுசரணையுடன் சித்தங்கேணி ஆன்மீக அறக்கட்டளை நடத்திய பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் வட்டுக்கோட்டை இந்து கல்லூரியின் சோமசுந்தரப் புலவர் அரங்கில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

மாணவர்களின் கலை நிகழ்வுகளைத் தொடர்ந்து சித்தங்கேணியிலுள்ள பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது.

சித்தங்கேணி ஆன்மீக அறக்கட்டளையின் தலைவர் திருச்சிற்றம்பலம் ஜனார்த்தனன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் பிரதம விருந்தினராவும், வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் பிரதி அதிபர் திருமதி வதனி தில்லைச்செல்வன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தார். இதில் சித்தங்கேணி ஆன்மீக அறக்கட்டளையினர், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(எ-05)

# பெரியானைக்குட்டி சுவாமிகள் குருபூஜை

யாழ்ப்பாணம், நவ. 12

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் சிவசிறீ பால. திருகுணானந்தக்குருக்கள் நடத்தும் வாராந்த திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவும், மாதத் தோறும் ஈழத்து சித்தர்கள் குருபூஜையும் தொடர் 07 பெரியானைக்குட்டி சுவாமிகள் குருபூஜை விழா தெல்லிப்பழை அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமைகாலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவநெறிப் பிரகாசர் , சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஆன்மீக விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பா. தனபாலன் கலத்து சிறப்பிக்கவுள்ளார்.

பெரியானைக் குட்டி சுவாமிகள் குருபூஜையை தொடர்த்து மாணவர்களின் கலை நிகழ்வுகளும் அதனையடுத்து" போற்றி பணிய வேண்டிய பெரியானைக்குட்டி சுவாமிகள்"என்னும் விடயப்பொருளில் பிரசங்க பூஷணம் சைவப்புலவர் செ. த. குமரனின் சொற்பொழிவும் , சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படும். தொடர்ந்து ஆன்மீக விருத்தினர் உரையும் குருபூஜையை முன்னிட்டு மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டி பரீட்சையில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் அலுவலர்களில் ஒரு பகுதியினரிடம் லஞ்சம் போன்ற சட்ட முரணான பழக்கங்கள்!

## திணைக்கள தலைவர்களுக்கு அவசர கடிதம்

மன்னார், நவ. 12

**அரசியல் உரிமைகளை அனுபவிக்க உரித்துடைய அலுவலர்கள் தகாத செல்வாக்கு மற்றும் இலஞ்சம் போன்ற சட்ட முரணான பழக் கங்களில் ஈடுபடுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் வே.சிவராஜா மன்னார் மாவட்டத்தில் உள்ள திணைக்கள தலைவர்கள், நிறுவனத் தலைவர் கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.**

அந்தக் கடிதத்தில்-தாபன விதிக்கோவையின் பிரகாரம், அரசியல் உரிமையை அனுபவிப்பதற்கு உரித்துடையவர்களான மன்னார் மாவட்டத்தில் பணியாற்றும் அலுவலர்களில் ஒரு பகுதியினர், பாராளுமன்ற தேர்தல் -2024 தொடர்பாக சட்ட முரணான பழக்கங்களில் ஈடுபட்டிருப்பதாக தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைக்கின்றன.

குறிப்பாக தமது கடமை நேரங்களில் அரசியல் பிரசாரங்களில் ஈடுபடுதல், தமது கடமை பரப்பெல்லைக்கு உட்பட்ட அலுவலகங்களிலும், கடமையாற்றும் கிராம அலுவலர் பிரிவுகளிலும் தமது சேவை நாடிகளான பொது மக்களிடம் தேரதல் பிரசாரங்களில் ஈடுபடுவதாக தொடர்ச்சியான முறைப் பாடுகள் கிடைத்த வண்ணமுள்ளன.

இவ்வாறான கருமங்களில் ஈடுபடும் அலுவலர் ஒருவர் 1981 ஆம் ஆண்டு முதலாம் இலக்க பாராளுமன்ற தேர்தல் சட்டத்தின் 80 ஆ உறுப்புரையின் கீழ் தவறொன்றை இழைத்தவராக கருதப்படுவார்.

அலுவலர் ஒருவரின் பதவி வழியாக, கடமை அதிகார எல்லை பிரதேசத்தில், அவரால் அரசியல் பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது இவ்வாறான தவறொன்றாக அமையும் என்பது தொடர்பாக தமது நிர்வாகத்தின் கீழ் உள்ள அலுவலர்களுக்கு அறிவூட்டும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

சுயாதீனம் நடுநிலை மற்றும் சுதந்திரமான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான தங்கள் ஒத்துழைப்பினை மிகவும் மதிக்கிறேன்-என்றுள்ளது. (அ)

# லேக்ஹவுஸ் நிறுவன சுவரில் மோதிய கார்!



கொழும்பு, நவ. 12

கொழும்பு லேக்ஹவுஸ் நிறுவனத்தின் பாதுகாப்பு சுவரில் நேற்று அதிகாலை கார் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியது.

விபத்தின்போது சாரதி மாத்திரமே காரில் இருந்ததாகவும் அவருக்கு காயங்கள் ஏற்படவில்லை எனவும் கொழும்பு கோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தினால் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் பாதுகாப்பு சுவர் பலத்த சேதமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு கோட்டை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# சுகாதார அமைச்சின் பெயரை பயன்படுத்திப் பணம் மோசடி!

කොළඹ, நவ. 12

සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதார அமைச்சு
Ministry of Health

சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளின் பெயர்களைப் பயன்படுத்தி ஒழுங்கமைக்கப்பட்ட குழுவொன்றினால் சுகாதார ஊழியர்கள் மற்றும் பொது மக்களிடம் பணம் வசூலிக்கும் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில்-

அமைச்சின் எந்தவொரு அதிகாரியும் தொலைபேசி, வாட்ஸ்அப் அல்லது வேறு எந்த ஊடகத்தையும் பயன்படுத்தி இதுபோன்ற பணத்தை சேகரிக்கும் அல்லது கோரும் செயலில் ஈடுபடமாட்டார்கள்.

இவ்வாறான மோசடியாளர்களிடம் சிக்கவேண்டாம். வங்கிக் கணக்கில் பணத்தை வைப்பிலிடவோ அல்லது வேறு வழிகளில் பணம் அனுப்பவோ வேண்டாம்.

இவ்வாறாறு மோசடி செய்பவர்களை சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது தொடர்பில் தேவையான சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன-என்றுள்ளது. (அ)

# கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கடமையாற்றிய கல்விசார் பணியாளர்களுக்கு சம்பளம் இல்லை

## ஜோசப் ஸ்டாலின் குற்றச்சாட்டு



கொழும்பு, நவ. 12

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கடமையாற்றிய ஆசிரியர்கள், அதிபர்கள், உள்ளிட்ட சுமார் 30,000 கல்வி பணியாளர்களுக்கு உரிய சம்பளம் வழங்கப்படவில்லை என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக சிங்கள வார ஏடு ஒன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலில்-

கடந்த செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று கிட்டத்தட்ட ஒன்றரை மாதங்கள் கடந்துள்ளபோதிலும், தேர்தல் கடமையில் ஈடுபட்ட ஆசிரியர்களின் தகவல்களை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு பிராந்தியக் கல்விப் பணிமனை வழங்கவில்லை.

பொதுத் தேர்தல் நடைபெற இன்னும் சில நாட்களே உள்ளன. ஆனால், ஆசிரியர்கள் தேர்தல் பணிகளில் பங்கேற்பதில் நிச்சயமற்ற நிலையில் இருக்கின்றனர்.

ஜனாதிபதித் தேர்தல் கடமைக்கான பணம் கிடைக்காததால் ஆசிரியர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். இந்த பணத்தை விரைவில் வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளேன்.

தேர்தல் பணிகளில் பங்கேற்கும் அரசு அதிகாரிகளுக்கு சம்பளம் கொடுப்பது போல் தேர்தல் குறித்து பேசுவது குறித்தும் தேர்தல் ஆணையம் அக்கறை காட்ட வேண்டும்-என்றார்.

# ஹெரோயின், ஐஸ் போதைப்பொருளுடன் கொழும்பில் குடும்பஸ்தர்கள் மூவர் கைது!

கொழும்பு, நவ. 12

கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட இரு வேறு சுற்றிவளைப்புக்களின்போது கல்கிஸை மற்றும் உடுகம பகுதிகளில் குடும்பஸ்தர்கள் மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பதவல வீதிக்கு அருகில் ஹெரோயின் போதைப் பொருளுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்கிஸை குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழுவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இரு சுற்றிவளைப்புக்களின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 38, 40 வயதுடைய மக்கோனா மற்றும் மொறட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

சந்தேக நபர்களிடம் இருந்து 10 கிராம் 350 மில்லிகிராம் மற்றும் 11 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, இவர்கள் மேலதிக விசாரணைகளுக்காகக் கல்கிஸை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், உடுகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சமகிகம பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொறட்டுவ பொலிஸ் விசேட அதிரடிப் படை முகாமின் அதிகாரிகள் குழுவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 46 வயதுடைய உடுகம பிரதேசத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

சந்தேகநபரிடம் இருந்து 12 கிராம் 700 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (அ)

# லொஹானின் பிணை மனு விசாரணை நவம்பர் 19 இல்!

கொழும்பு, நவ. 12

முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, பிணையில் விடுதலை செய்யுமாறு கோரி தாக்கல் செய்த மனுவை எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு பரிசீலிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தீர்மானித்துள்ளது.

மிரிஹான பகுதியில் உள்ள வீடொன்றில் பதிவு செய்யப்படாத கார் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதன்படி, முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் பிணையில் விடுவிக்கக் கோரி தாக்கல் செய்த மனுவை பரிசீலித்த நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் ஷஷி மகேந்திரன் ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

அன்றைய தினம், இந்த மனு தொடர்பான உண்மைகளை தெரிவிக்குமாறு சட்டமா அதிபர் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்புமாறு மனுதாரருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ)

# அனைத்து அரச நிறுவனங்களிலும் கணக்காய்வு மேற்கொள்ள திட்டம்!

கொழும்பு, நவ. 12

பொதுத் தேர்தலுக்குப் பின்னர் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அமைக்கப்பட்டால் அனைத்து அரச நிறுவனங்களிலும் கணக்காய்வுகளை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சிங்கள வார ஏடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த வார ஏட்டின் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

கடந்த அரசாங்கத்தின் போது இடம்பெற்றதாகச் சந்தேகிக்கப்படும் மோசடிகள் மற்றும் ஊழல்கள் தொடர்பில் முழுமையாக விசாரணை நடத்தப்படும் என்று அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு அரச நிறுவனத்திலும் ஊழல் மோசடிகள் இடம்பெற்றிருந்தால் சட்டத்தை நடைமுறைப்படுத்தவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது-என்றுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உட்கட்சி மோதலினால் பலவீனப்பட்டுள்ளோம்

## தமிழரசு வேட்பாளர் இளங்கோவன்

கிளிநொச்சி, நவ. 12

**தமிழரசு கட்சியின் உட்கட்சி மோதல் காரணமாக தமிழ் மக்கள் மத்தியில் நாம் பலவீனப்பட்டுள்ளோம். இது கவலைக்ககுரிய விடயம் என அக் கட்சியின் பாராளுமன்ற தேர்தல் வேட்பாளார் இளங்கோவன் தெரிவித்தார்.**

கிளிநொச்சியில் தனியார் விருந்தகம் ஒன்றில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த தேர்தலில் நான் தெரிவு செய்யப்பட்டாலும், தெரிவு செய்யப்படாது விட்டாலும் எதிர்காலத்தில் தமிழரசுக் கட்சியை ஒற்றுமையாக ஒரு தலைமையின் கீழ் கொண்டு செல்வதற்கு முயற்சிகளை மேற்கொள்வேன். எங்களை பொறுத்தவரை நாங்கள் தமிழ் மக்களின் மக்களின் உரிமைக்கும் பொருளாதார அபிவிருத்திக்குமாக செயபடுவோம்.

இது ஒரு மிக மோசமான நிலைமை. தமிழரசு கட்சி உட்கட்சி மோதல்களால் பலவீனப்பட்டுள்ளது. இதன் காரணமாக மக்களும் நம்பிக்கையற்றுள்ளனர். இந்த நிலைமை நிவர்த்தி செய்யப்பட வேண்டும். எதிர்காலத்தில் நான் எமது கட்சியை ஒற்றுமைப்படுத்தி ஒரு அணியாக கொண்டு செல்வதற்கு முயற்சிப்பேன்-என்றார். (அ)





# யாழ். சமயத் தலைவர்களுடன் டக்ளஸ் தேவானந்தா சந்திப்பு

யாழ்ப்பாணம், நவ. 12

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பராமாச்சாரிய சுவாமிகளை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மரியாதையின் நிமிர்த்தம் சந்தித்து கலந்துரையாடினார்.

நல்லை ஆதீனத்துக்கு நேற்று காலை சென்ற ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாச்சாரிய சுவாமிகளை சந்தித்ததுடன் சுவாமிகளின் நலன்கள் தொடர்பாக கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் சமகால அசியல் நிலைவரங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையையும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மரியாதையின் நிமிர்த்தம் சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஆயர் இல்லத்தில் மேற்படி சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

சமகால நிலைவரங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் பரஸ்பரம் கலந்துரையாடப்பட்டது.

(அ-05)

# எங்களின் வெற்றி எப்போதோ உறுதி

## கூறுகிறார் அங்கஜன்

யாழ்ப்பாணம், நவ. 12

எமது ஆட்கள் சத்தமில்லாமல் வாக்கிடும் வேலையை செய்து நவம்பர் 14 இல் நாட்டுக்கு நாம் யார் என்பதை காட்டுவார்கள் என பாராளுமன்ற முன்னாள் உறுப்பினரும் ஜனநாயக தேசிய கூட்டணியின் முதன்மை வேட்பாளருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

ஜனநாயக தேசிய கூட்டணியின் தேர்தல் பிரசார கூட்டம் யாழ்ப்பாணம் நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டு கழக மைதானத்தில் நேற்று காலை இடம்பெற்றது. இதன் போது உரையாற்றியபோதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் எங்கள் மக்களை கஷ்டப்படுத்தி தேர்தல் பிரசாரம் செய்ய கூடாது என நினைத்தேன். அதையும் தாண்டி மக்கள் இன்று இங்கு கூடியுள்ளனர்.

2020 எல்லாரும் என்ன சொன்னார்கள். வெற்றியாளர் என்ற கணக்கில் எம்மை சேர்ப்பதில்லை. அங்கஜனுக்கு ஆசனம் இல்லை என்றனர். ஆனால் எங்கள் ஆட்கள் சத்தமில்லாமல் வேலை செய்தார்கள்.

ஒரு சிலர் சில மாதங்களாக வேலை செய்கின்றனர். ஒரு சிலர் இரண்டு மாதங்களாக வேலை செய்கின்றனர். நாம் நான்கு வருடங்களாக ஒடிக்கொண்டே இருக்கிறேன். இன்னும் முடியவில்லை. நான் மீண்டும் வந்துள்ளேன். இன்னும் வேகமாக ஒடுவதற்கான ஆணையைக் கோர. போலி செய்திகளை வைத்து அரசியலில் எம்மை அகற்ற நினைத்தனர். 4 வருடத்தில் என்ன செய்தாய் என கேட்டார்கள். நான் என்ன செய்தேன் என்ற கணக்கறிக்கையை முழு விவரமாக முதல் பிரசார கூட்டம் தொடக்கம் வெளிப்படுத்தியிருக்கிறேன்.

இதுவரை வேறு யாராவது பாராளுமன்ற உறுப்பினர்கள் கணக்கறிக்கையை காட்டியிருக்கிறார்களா? செய்தால் தானே காட்ட முடியும்.

ஏழு பாராளுமன்ற உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து பாராளுமன்றம் சென்றோம். இதில் அமைச்சுப் பதவிகளை எடுக்காமல் அபிவிருத்தி குழு தலைவர் பதவியை மாத்திரமே வைத்துக்கொண்டே நான் பல விடயங்களை செய்துள்ளேன்.

அங்கஜன் தனது அப்பாவின் பணத்தை கொண்டு வந்தாரா என சிலர் கேட்பார்கள். யாழ் மாவட்ட மக்களுக்கு அபிவிருத்தி செய்வதற்கு அப்பாவின் பணம் தேவையில்லை. மக்கள் பணமே போதுமானது. உங்கள் வரிப்பணத்தை உங்களுக்கு கொண்டுவருவதே பாராளுமன்ற உறுப்பினர்களின் வேலை. ஆனால் வேலை செய்பவர்களையும் குற்றஞ்சாட்டி காலம் காலமாக பேசிப் பேசியே செய்யும் அரசியல் மட்டும் இங்கு நடக்கிறது. இதனால்தான் எங்கள் மாவட்டத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர்களும் குறைந்து, மாவட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு என்பனவும் குறைகிறது-என்றார். (அ)

# அம்பாறையில் தமிழரசு பிரசாரம்

அம்பாறை, நவ. 12

அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் நேற்று தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் கவீந்திரன் கோடீஸ்வரனின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் தமிழரசு கட்சியின் பொத்துவில் தொகுதி தலைவர், திருக்கோவில் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்கள், கட்சி உறுப்பினர்கள், தொண்டர்கள், ஆதரவாளர்கள் பொது மக்கள் என பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர். (அ)

# திருமலையில் அனைவரும் இணைந்து வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிப்போம்!

## தமிழ் சமூக செயல்பாட்டாளர்கள் இணையம் வேண்டுகோள்

திருமலை, நவ. 12

திருகோணமலை மாவட்டத்தில் இம்முறையும் வீட்டுச் சின்னத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் நான்கு கட்சிகள் இணைந்து போட்டியிடுகிறது. உணர்வுள்ள தமிழர்கள் திருகோணமலை மண்ணின் இருப்பை தக்க வைக்க அனைவரும் ஒற்றுமையாக வீட்டுச் சின்னத்துக்கு மட்டும் வாக்களியுங்கள் என திருகோணமலை தமிழ் சமூக செயல் பாட்டாளர்கள் இணையம் வேண்டுகோள் விடுத்துள்ளனர் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

வடக்கு-கிழக்கின் தலைநகராம் திருகோணமலையில் நான்கு தமிழ் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து பொதுச்சின்னமான வீட்டு சின்னத்தில் போட்டி இடுகிறார்கள்.

எமது தமிழ்தேசியத்தின் பிரதிநிதித்துவம் திருகோணமலையில் இல்லாதொழிக்க நன்கு திட்டமிடப்பட்டு 14 சுயேச்சை குழுக்களும், 17 கட்சிகளும் போட்டி இடுகின்றன.

தமிழ் மக்களின் வாக்குச் சிதறலால் ஓர் இரு ஆயிரங்களால் எமது தலைநகரப் பிரதிநிதித்துவம் இழக்கப்படலாம்.

எனவே, ஒரு சில நூறு வாக்குகளை மட்டும் பெறப்போகும் தமிழ்த் தேசியத்திற்கெதிரான சுயேட்சைக் குழுக்களுக்கும், கட்சிகளுக்கும் வாக்களித்து உங்கள் வாக்கை வீணாக்காமல் நான்கு கட்சிகளின் ஒன்றிணைவான வீட்டுச் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு தாழ்மையுடன் கேட்டு கொள்கிறோம்.

ஏன் எனில் இதுவல்ல தருணம். திருகோணமலை தமிழ் மக்கள் தமக்குள் பல கோணங்களாய்ப் பிரிந்து கிடப்பதற்கு கடந்த கால அரசியலில் பல குறைபாடுகள் உண்டுதான். மறுக்கமுடியாது.

ஆனாலும் எங்கள் தவிர்க்க முடியாத கடமை, இந்த தேர்தலில்எமது தொலைநோக்கிற்கான பலத்தைப்பெறவேண்டும்.

கட்சியின் மீது வெறுப்பிருக்கலாம், கோபம் இருக்கலாம் - ஆனால் இதுவல்ல தருணம் கட்சிக்கு பாடம் கற்பிப்பதாக எண்ணி திருகோணமலைத் தமிழர்களின் பிரதிநிதித்துவத்தைப் போட்டுடைப்பதற்கு, - முதலில் தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை ஒன்றாய் பாதுகாப்போம்-என்றுள்ளது.

(அ-05)

# இரு பக்கமும் இணங்கக்கூடிய பொறிமுறையை எடுத்துச் சென்றால் தான் அரசியல் தீர்வு கிட்டும்

யாழ்ப்ணம், நவ. 12

சமஸ்டியா ஒற்றையாட்சியா என்பது முக்கியமல்ல. தமிழ் மற்றும் சிங்கள தரப்பினர் அதாவது இரு பக்கங்களும் இணங்கக் கூடிய வகையில் பொறிமுறையை எடுத்துச் சென்றால் தான் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அரசியல் சார் பிரச்னையை தீர்க்கலாம் என்பதே எமது நிலைப்பாடு. அதனை நோக்கியே எமது அரசியல் நகர்வுகளும் இணக்க அரசியல் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் ஊடக பேச்சாளரும் பாராளுமன்ற தேர்தல் வேட்பாளருமான ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இதேநேரம் மத்தியில் கூட்டாட்சி [illegible] என்பதே எமது நிலைப்பாடு. இதன்படியே மக்களுக்கான சேவையை நாம் முன்னெடுத்து வந்துகொண்டிருக்கின்றோம். இதேநேரம் நடைபெறவுள்ள தேர்தலுக்கு பின்னரே ஆட்சியில் பங்கெடுப்பதா அல்லது பங்கெடுக்காதிருப்பதா என்ற எமது நிலைப்பாடு இருக்குமே தவிர யாழ்ப்பாணத்தில் வந்து புலம்பும் ஒரு சிலர் கூறுவதை போன்று நாம் எச்சந்தர்ப்பத்திலும் அமைச்சு பதவியை பெறவுள்ளதாக கூறியிருக்கவில்லை. அவ்வாறான எண்ணமும் எமக்கு இல்லை-என்றார்.

(அ-05)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் மேடைகளில் கூறிய விடயங்கள் பொய்யென ஏற்கும் தேசிய மக்கள் சக்தி

**கூறுகிறார் நாமல் ராஜபக்ஷ**

கொழும்பு, நவ. 12

**தேர்தல் மேடைகளில் கூறிய விடயங்கள் பொய்யென தாமே ஒத்துக்கொள்ளும் நிலைக்கு தேசிய மக்கள் சக்தி தள்ளப்பட்டுள்ளதாக பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**



பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது கட்சி என்ற வகையில் நாம் பாரிய சவால்களை எதிர் நோக்கிநோம். அதனைத் தொடர்ந்து உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் காரணமாக வீழ்ச்சி கண்டிருந்த சுற்றுலாத்துறையை மேம்படுத்த நடவடிக்கை எடுத்த தருணத்தில் கொவிட் நெருக் கடி ஏற்பட்டது.இந்த தருணத் தில் போராட்டங்களை மேற் கொண்ட தரப்பினர் இருந்தனர்.

அதன் ஊடாக அரசியல் இலாபம் உழைத்தவர்கள் இருந் தனர். அந்த வகையில் இந்த நெருக்கடிகளின்போது அரசி யல் இலாபம் உழைத்தவர்கள் நாட்டின் ஆட்சி அதிகாரத்திற்கு வந்துள்ளனர்.தேர்தல் மேடைக ளில் கூறிய பொய்யான கருத் துக்களை இப்போது அவர்களே பொய் என ஒத்துக்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட் டுள்ளனர்.

பிழைகளை திருத்திக்கொண்டு முன்நோக்கிப் பயணிக்க நாம் தயாராகவுள்ளோம். அதுவும் கொள்கைக்கு அமையவே பய ணிப்போம்.தேசிய மக்கள் சக்தி யினர் தமது கொள்கை பிரகட னத்தில் கூறியுள்ள பொய் களை யாதார்த்தமாக்க முடியாது என் பது உறுதியாகிக்கொண்டுள் ளது-என்றார். (அ)

# திருடர்களை பிடிக்க அநுரவின் அரசுக்கு உதவி வழங்க தயார்!

**எஸ்.எம். மரிக்கார் கூறுகிறார்**

கொழும்பு, நவ. 12

திருடர்களை பிடிக்க தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு உதவி வழங்க தயாராகவுள்ள தாக ஐக்கிய மக்கள் கூட்டணி யின் கொழும்பு மாவட்ட வேட் பாளர் எஸ்.எம். மரிக்கார் தெரி வித்துள்ளார்.




கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

தாம் இன்னமும் எதிரணியில் உள்ளதாகவே தேசிய மக்கள் சக்தியினர் எண்ணுகின்றனர். தேர்தல் மேடைகளில் நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதி களை நிறைவேற்ற முடியாமைக் கான சான்றுகளே தென்படுகின் றன.

பாராளுமன்ற அதிகாரமின்றி பொருள் விலையை குறைக்க முடியாதாயின் எவ்வாறு வரியை அதிகரித்தனர் என வினவ விரும் புகின்றேன். காட்சிப்படுத்தல் களை மேற்கொண்டு அரசியலை முன்கொண்டு செல்ல முடியாது. மக்கள் எதிர்பார்ப்புக்களை அவர்கள் நிறைவேற்றியுள்ளனர். ஆயின் எதிர்வரும் தேர்தலில் அதன் பிரதிபலனை காண முடி யுமாக இருக்கும்.

திருடர்களை பிடிக்க நாம் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத் திற்கு உதவி வழங்குவோம். ஆனால் பொருளாதாரத்தை மீட்க தேவையான குழு எம்மு டனேயே உள்ளது-என்றார்.

# ஐக்கிய மக்கள் சக்தியை வெற்றி பெற செய்யுங்கள்

**சஜித் பிரேமதாஸ கோரிக்கை**

கொழும்பு, நவ. 12

பொய்யான வாக்குறுதிகளை வழங்கி நாட்டை ஏமாற்றி வரும் தேசிய மக்கள் சக்தியினரை விடுத்து ஐக்கிய மக்கள் சக்தியை வெற்றிபெறச் செய்யுமாறு ஐக் கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பொதுத் தேர்தலை இலக் காக் கொண்டு மஹரகம பிரதேச மக்களுடனான சந்திப்பொன்று ஐக்கிய மக்கள் சக்தியினதும் ஐக்கிய மக்கள் கூட்டணியின தும் தலைவரான சஜித் பிரேம தாஸ தலைமையில் இடம்பெற் றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பா ளர் காமினி திலகசிறி ஏற்பாடு செய்யப்பட்ட இச்சந்திப்பில் கட்சி செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண் டனர்.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

களவு, இலஞ்சம், ஊழல் ஒழிக்கப்படும், எரிபொருள் விலை குறைக்கப்படும் என தற்போதைய ஜனாதிபதி சகல தேர்தல் மேடைகளிலும் கூறி னார். அவ்வாறான ஊழல் மோச டிகள் இல்லை என அனுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலை வர் தற்போது தெரிவித்து வருகிறார்.

எரிபொருள் குறைத்து மக்க ளுக்கு சலுகைகளை தருவதாக கூறிய இவர்கள் தற்போது மக்களை ஏமாற்றி வருகின்றனர். எரிபொருள் விலை சூத்திரத்துக்கு தாம் அடிபணியப்போவதில்லை எனக் கூறிய அனுரகுமார திஸா நாயக்க, எரிபொருள் விலை சூத்திரத்தின் பிணைக்கைதியாக மாறியுள்ளார். கடைசியாக பணக் கார வர்க்கம் பயன்படுத்தும் எரிபொருள் விலைகளை குறைத் துள்ளனர்.

மின்கட்டணத்தை 33 வீதம் குறைப்போன் என்றார். இதனை நிறைவேற்றுவதற்கு பாராளு மன்ற பெரும்பான்மை தேவை யில்லை. ஆனால் இன்னும் குறைத்தபாடில்லை. நாட்டை ஏமாற்றி வரும் இந்தக் குழுவிற் குப் பதிலாக, ஐக்கிய மக்கள் சக்தியை வெற்றிபெறச் செய்யுங் கள். நாட்டு மக்களுக்கு நிச்சயம் நிவாரணம் அளிக்கும் புதிய சர்வதேச நாணய நிதிய ஒப்பந் தத்திற்கு இணக்காப்பாட்டை காண்போம்-என்றார். (அ)

# ரணில் இருந்திருந்தால் இப்போது 3 ஆவது கடன் கிடைத்திருக்கும்!

**கூறுகிறார் மனுஷ நாணயக்கார**

கொழும்பு, நவ. 12

ரணில் விக்ரமசிங்க ஜனாதிப தியாக இருந்திருந்தால் சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாவது கடனுதவி தற்போது கிடைத்தி ருக்கும் என முன்னாள் அமைச் சர் மனுஷ நாணயக்கார தெரி வித்துள்ளார்.



காலியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

வரவு-செலவுத் திட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாலும், பொதுத் தேர்தலை நடத்துவ தற்கு தற்போதைய அரசாங்கம் எடுத்த தீர்மானத்தினாலும் சர் வதேச நாணய நிதியத்தின் தவணை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தற்போதைய அரசாங்கம் புதிய அரசியல மைப்பை அறிமுகப்படுத்த முயற்சிக்கின்றது. மக்களின் கருத்துக்களைக் கேட்காமல் கொண்டு வரப்படும் இந்த அர சியலமைப்பு இன, மத நிலையை மாற்ற முயற்சிக்குமா என்பது சந்தேகமே.

ஐ.எம்.எப் கடன் தவணை அடுத்த வாரம் நிறைவேற்றப்ப டாது. ஆனால் அதன் பிரதிநிதி கள் குழு இலங்கை வர உள்ளது.

மேலும், அரசாங்கம் நாடு மீண்டும் திவாலாகும் வாய்ப் பைப் பொருட்படுத்தாமல் தேர் தல் வெற்றிக்கான முடிவுகளையே எடுத்துள்ளனர்.

அதனால்தான் வரவு - செல வுத் திட்டத்தை அறிமுகப்படுத் தாமல் தேர்தல் நடத்தப்படுவ தோடு, அவர்கள் தங்கள் எதிர் கால நிகழ்ச்சி நிரலில் வரவு - செல வுத் திட்டத்தை முன்மொழிந்தி ருந்தால், சர்வதேச நாணய நிதி யம் குறித்த நிகழ்ச்சி நிரலைப் பார்த்து முடிவுகளை எடுத்திருக் கும்-என்றார். (அ)

# கண்ணீர் விட்ட ரோஹித

கொழும்பு, நவ. 12

நாங்கள் ஆட்சி அமைக்க மாட்டோம் என தெரிந்தும் களுத்துறை பிரதேசத்திற்கு நன் றியை தெரிவிக்கவே வந்தேன் என தெரிவித்து முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகு ணவர்தன கண்ணீர் விட்டழுத சம்பவம் சமூக ஊடகங்களில் அதிகம் பகிரப்பட்டு வருகிறது.

களுத்துறையில் நேற்று இடம் பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் கண்ணீர் விட்டழுதுள்ளார்.

அங்கு உரையாற்றிய அவர், அபேகுணவர்தன அமைச்சராக மாட்டார் என்பது இங்குள்ள மக்களுக்கு தெரியும். நாங்கள் ஆட்சி அமைக்க மாட்டோம்.

அதையறிந்து நான் இங்கு எனது நன்றியை தெரிவிக்கவே வந்தேன்.

எனினும் விரக்தியால் அரசி யலை விட்டு விலக மாட்டேன் -என்றார். (அ)

# தமிழ் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் எமக்கு மிகவும் இன்றியமையாதது!

**வடிவேல் சுரேஷ் சுட்டிக்காட்டு**

கொழும்பு, நவ. 12

மக்களின் காணி உரிமை, வீட்டு பிரச்னை, இளைஞர்க ளுக்கான தொழில் வாய்ப் பின்மை , மாணவர்களின் கல்வி நிலை என்பவற்றுக்கான பிரச் னைகளை தீர்ப்பதற்கு தமிழ் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இன்றியமையாதது என ஐக்கிய ஜனநாயக குரலின் பதுளை மாவட்ட வேட்பாளர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

பதுளை -ஹாலியெல -உனு கல பிரதேசத்தில் மக்களுடன் அவர் கலந்துரையாடினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

தற்போது மக்களை ஏமாற்று வதற்காக ஐயாயிரம், ஐம்பதாயி ரம் என பணம் கொடுத்து வந் தாலும், 14ஆம் திகதிற்கு பின் னர் மக்கள் கைவிடப்படுவார்கள்.

எந்த பிரச்னை வந்தாலும் முன்வந்து அதற்கான தீர்வை பெற்றுதருவதற்கு காரணம், என் மக்களின் பிரச்னை எனக்கு தெரியும் என்பதால்.

யாரும் எனக்கு அதனைக் கூற தேவையில்லை. மக்களின் கலை,கலாசார, பண்பாட்டை யும், மாணவச்செல்வங்களின் கல்வியையும், இளைஞர்களுக் கான வேலை திட்டங்கள், அவர் களின் இருப்பு தொடர்பாக பல் வேறு செயற்திட்டங்களை முன் னெடுக்கவுள்ளேன்.

ஜனாதிபதி தேர்தலில் தோல் வியுற்ற நாம், பாராளுமன்ற தேர்தலில் தோற்கப் போவ தில்லை. மக்களை அரசியல் அநாதையாக்க விடப்போவ தில்லை.

எங்களை தோற்கடிக்க பலர் கனவு கண்டுகொண்டிருக்கின்ற னர். அது இம்முறை நடக்காது- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறையற்ற தேர்தலுக்காக அனைவரும் ஒன்றிணையுங்கள்

## கபே நிறைவேற்று பணிப்பாளர் வலியுறுத்தல்




கல்முனை, நவ. 12

**சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் நடைபெற வேண்டும் என்றால் நிச்சயமாக அது வன்முறையற்ற தேர்தலாக இருக்க வேண்டும். வன்முறையற்ற தேர்தலுக்காக அனைத்து அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களும் ஆதரவாளர்களும் ஒன்றிணைய வேண்டும் என்று கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன் வலியுறுத்தியுள்ளார்.**

சமூக வலைத்தளங்களை தேர்தல் காலங்களில் முறையாக பாவியுங்கள் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கமான கபே அமைப்பால் அமைதியான தேர்தலுக்காக ஒன்றுபடுவோம் எனும் தொனிப்பொருளில் எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு கட்சி வேட்பாளர்கள், சுயேச்சைக்குழுக்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்களை தெளிவூட்டும் நிகழ்வும் கபே அமைப்பின் தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கான விசேட கலந்துரையாடலும் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் எஸ். எல். அப்துல் அஸீஸ் தலைமையில் நேற்று கல்முனை பகுதியிலுள்ள அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்பின்னர் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த 15 வருடங்களுக்கு முன்னர் இருந்த தேர்தல் நிலவரமும் தற்போது இருக்கின்ற நிலவரத்தையும் பார்க்கும் போது வன்முறையற்ற தேர்தல் கலாசாரம் உருவாகியுள்ளது. அதாவது ஜனநாயகத்தை மதிக்கின்ற வன்முறைகள் அற்ற ஒரு சமாதானமான தேர்தலுக்காக அனைவரும் ஒன்றிணையும் ஒரு கலாசாரம் உருவாக்கப்பட்டுக் கொண்டிருப்பதை அவதானிக்கின்றோம். அதற்கு உதாரணமாக கடந்த ஜனாதிபதித் தேர்தலை குறிப்பிடலாம். அதேபோன்று இந்த பொதுத் தேர்தலிலும் இதுவரை பாரியளவிலான வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகள் எவையும் பதியப்படவில்லை. இதேவேளை, பிரசார நடவடிக்கைகளுக்கு சமூக ஊடகங்கள் பெரும் பங்கினை வழங்குகின்றது. இவற்றை நாம் கண்காணிக்கும் போது வேட்பாளர்களுக்கு எதிராக சேறு பூசக்கூடிய - இழிவுபடுத்தக் கூடிய போலிப்பிரசாரங்கள் நாளுக்கு நாள் அதிகரிப்பதை அவதானிக்க முடிகின்றது. சட்டவிரோத தேர்தல் பிரசாரம் தொடர்பான முறைப்பாடுகளே அதிகளவில் கிடைப்பதை அவதானிக்க முடிகின்றது. இது தவிர கடந்த கால தேர்தலில் காத்தான்குடி பிரதேசத்தில் பாடசாலை சிறுவர்கள் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுத்தப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்திருந்தன.

கபே அமைப்பு தேர்தல் தொடர்பில் அறிவித்தல் விடுக்கப்பட்ட தினத்தில் இருந்து 25 மாவட்டங்களில் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றது. இதுவரை கபே அமைப்புக்கு பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதில் அதிகளவான முறைப்பாடுகள் தேர்தல் சட்டவிதிகளை மீறுகின்றமை தொடர்பில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அத்துடன், சமூகவலைத்தளங்களை பாவித்து வேட்பாளர்களை இழிவுபடுத்துகின்ற பொய் பிரசாரங்களை வீடியோ பதிவுகள் - போலி முகநூல் மற்றும் வட்ஸப் ஊடாகவும் பதிவுகள் இடப்பட்டுள்ளன. இவ்வாறான செயல்பாடு சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கு பாதகத்தை ஏற்படுத்தக் கூடியதாக காணப்படுகிறது.

எனவே, அனைத்து அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடியவர்களை வரவழைத்து அமைதியான தேர்தலுக்காக ஒத்துழைப்போம் என்ற வகையில் சத்தியப்பிரமாணம் ஒன்றை பெறுகின்றோம். எனவே, சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் நடைபெற வேண்டும் என்றால் நிச்சயமாக அது வன்முறையற்ற தேர்தலாக இருக்க வேண்டும். வன்முறையற்ற தேர்தலுக்காக அனைத்து அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களும் ஆதரவாளர்களும் ஒன்றிணைய வேண்டுமென கபே அமைப்பு கேட்டுக்கொள்கின்றது .

அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் அனைவரிடமும் வேண்டிக் கொள்ளுவது இதுவரை காலப் பகுதியில் பாரிய வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறாத நிலையில் தேர்தல் பிரசார நடவடிக்கையை எவ்வாறு ஈடுபட்டுவந்தீர்களோ அதேபோன்று தேர்தல் தினத்திலும் அதனைத் தொடர்ந்து வரக்கூடிய 7 நாட்களுக்கு பின்னரான காலப்பகுதிக்குள் சமாதானமான தேர்தலுக்காக ஒன்றுபடவேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம்"- என்றார்.

(எ)

# கர்நாடக சங்கீத போட்டியில் மட்டு. மாணவர்கள் முதலிடம்

திருகோணமலை, நவ. 12

அகில இலங்கை கர்நாடக சங்கீத போட்டியில் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி மாணவர்கள் முதலிடம் பிடித்துள்ளனர்.

நேற்று முன்தினம் திருகோணமலையில் நடைபெற்ற அகில இலங்கை கர்நாடக சங்கீத போட்டியின் தேசிய மட்டப் போட்டியில் திறந்த குழு இசை மற்றும் இரண்டு தனியிசை

போட்டிகளில் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி பங்குபற்றியிருந்தது.

இந்தக் கல்லூரியின் முன்னாள் சங்கீத ஆசிரியை திருமதி சாந்தினி தர்மநாதனின் பயிற்றுவிப்பில் மாவட்ட, மாகாண மட்ட போட்டிகளில் வெற்றி பெற்று தேசிய மட்ட போட்டியில் மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இந்த போட்டியில் குழு இசை தேசியத்தில் முதல் இடத்தையும் ஜாவளி தனியிசையில் இரண்டாம் இடத்தையும் திருப்புகழ் தனியிசையில்

மூன்றாம் இடத்தையும் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி சுவீகரித்தது.

(எ)



# குட்டிப் பறவை வை. எம். சி. ஏ. முன்பள்ளியின் ஆண்டு விழா

மட்டக்களப்பு, நவ. 12

மட்டக்களப்பு குட்டிப் பறவை வை. எம். சி. ஏ. முன்பள்ளியின் ஆண்டு விழா தேவநாயகம் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது, முன்பள்ளி சிறார்களின் கலை, கலாசார நிகழ்வுகள் நடைபெற்றன. இதில் பங்குபற்றிய அனைத்து சிறுவர்களுக்கும் பரிசுப் பொதிகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (எ)

# தேசிய வாசிப்பு மாத நிகழ்வு

ஒலுவில், நவ. 12

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலயத்தின் நூலக கற்றல் வள நிலையத்தால் பல செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதனடிப்படையில் இறுதி நாள் நிகழ்வு நேற்று பாடசாலையில் நடைபெற்றது. இதன்போது போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டன. (எ)



# நீரில் அடித்து செல்லப்பட்ட இளைஞன் மீட்கப்பட்டார்

மட்டக்களப்பு, நவ. 12

வெள்ள அனர்த்தத்தால் மட்டக்களப்பு மாவட்ட விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கும் நோக்குடன், மட்டக்களப்பு முகத்துவார ஆற்றுவாய் வெட்டப்பட்டு

மேலதிக நீரை கடலுடன் இணைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் இளைஞரொருவர் நீருடன் அடித்துச் செல்லப்பட்ட சம்பவமொன்றும் இடம்பெற்றது.

மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த இளைஞனே நீருடன் அடித்துச் செல்லப்பட்டவராவர்.

ஆற்று நீர் கடலுடன் கலக்கும் இடத்தில், மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட வேளை, எதிர்பாராத விதமாக நீரின் வேகம் அதிகரித்தமையே இவ் அனர்த்தத்துக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

முகத்துவாரப் பகுதியில் நின்ற சக மீனவர்கள் துரிதமாகச் செயல்பட்டு, நீரில் அடித்துச் செல்லப்பட்ட இளைஞனை மீட்டனர்.

(எ)

# சுகாதாரத்தை மேம்படுத்தும் வேலைத்தளங்கள் மதிப்பீடு

கல்முனை, நவ. 12

சுகாதார அமைச்சின், சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்புரைக்கு அமைவாக கல்முனை பிராந்தியத்தில் உள்ள சுகாதாரத்தை மேம்படுத்தும் வேலைத்தளங்களை மதிப்பீடு செய்யும் வகையில் விசேட வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவிலுள்ள சாய்ந்தமருது பிரதேச செயலகத்தை மதிப்பீடு செய்யும் நிகழ்வு நடைபெற்றது. கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸதீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய சுற்றுச்சூழல், தொழில், சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்புப் பிரிவு, சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் என்பன இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்தன.

இதன்போது பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் சுகாதார மேம்பாட்டை மதிப்பீடு செய்யும் பொருட்டு அவர்களின் உடல் திணிவுச் சுட்டி, இரத்த அழுத்த அளவீடு, பல் மருத்துவ சேவை உள்ளிட்ட பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸாமீது கொடூரத் தாக்குதல் குழந்தைகள் உட்பட 17 பேர் பலி

காஸா, நவ. 12

**காஸாமுனைமீது நேற்று அதிகாலை இஸ்ரேல் படையினர் நடத்திய கொடூரத் தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் உட்பட 17 பேர் உயிரிழந்தனர்.**

வடக்கு காஸாவின் ஜபாலியா பகுதியில் ஒரு மாதத்துக்கும் மேலாக இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது.

ஹமாஸ் அமைப்பினரை ஒழிக்கும் நடவடிக்கையாக காஸா மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்களில் 43 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். வான்வழி மற்றும் தரைவழித் தாக்குதல்களால் காஸாவின் பெரும்பாலான பகுதிகள் அழிந்துவிட்டன. காஸாவின் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 90 சதவீத மக்கள் போரினால் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களில் பெரும்பாலும் நெரிசல் மிகுந்த கூடார முகாம்களில் வாழ்கின்றனர். சில சமயம் முகாமில் உள்ள மக்களும் இஸ்ரேலின் வான் தாக்குதலில் பலியாகின்றனர்.

இந்த நிலையில், நேற்று அதிகாலையில் வடக்கு காஸா முனையில் உள்ள ஒரு முகாம் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 17 பேர் கொல்லப்பட்டனர்.

இதுபற்றி காசா சிட்டியில் உள்ள அல்-அஹ்லி மருத்துவமனை இயக்குனர் பாதல் நயீம் கூறுகையில், ஜபாலியாவில் உள்ள நகர்ப்புற அகதிகள் முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 9 பெண்கள் உட்பட 17 பேர் உயிரிழந்ததாகவும், அவர்களின் உடல்கள் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டதாகவும் கூறினார். (எ)

# உக்ரைன் மீதான போரை தீவிரப்படுத்த வேண்டாம்

## புடினிடம் ட்ரம்ப் வலியுறுத்தல்



வாஷிங்டன், நவ. 12

உக்ரைன் மீதான போரை தீவிரப்படுத்த வேண்டாம். போரை கைவிட வேண்டுமென அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற டொனால்ட் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார். இதேவேளை,

ட்ரம்புக்கும், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுகள் குறித்து தங்களுக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்படவில்லை. இதனை ஏற்கவோ அல்லது எதிர்க்கவோ முடியாது என்று உக்ரைன் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வருகிறது. இந்தப் போரை முடிவுக்கு கொண்டுவர பல்வேறு நாடுகளும் முயற்சி மேற்கொண்டு வருகின்றன. (எ)

# தி. மு. க. அரசு ஆன்மீக அரசு தருமபுரம் ஆதீனம் புகழாரம்

தஞ்சாவூர், நவ. 12

கோவில் சொத்துகளை தமிழக அரசு மீட்டு வருகிறது. தற்போதுள்ள தி. மு. க. அரசு ஆன்மீக அரசு என்று தஞ்சாவூரில் தருமபுரம் ஆதீனம் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தெரிவித்தார்.

செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் கூறியவை வருமாறு,

"தஞ்சை பெரிய கோவிலின் கட்டுமானம் குறித்து உலகளவிலான ஆய்வாளர்கள் கூட கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு மிகப்பெரிய சாதனையை இராஜராஜ சோழன் செய்துள்ளார். விட்டுக் கொடுத்தால் கெட்டுப் போவதில்லை என்பதற்கு உதாரணமாக இராஜராஜ சோழன் விளங்கினார். இராஜராஜசோழனின் சதயவிழாவை சிறப்பாக நடத்த உத்தரவு பிறப்பித்த முதலமைச்சர் மு. க. ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன்.

தற்போதுள்ள தி. மு. க. அரசு ஆன்மீக அரசு. அதை மெய்ப்பிக்கும் வகையில் அனைத்து முகூர்த்த நாட்களிலும் குடமுழுக்குகளை நடத்திக் கொண்டிருக்கின்றனர். திருப்பணிகளை விரைந்து செய்து அதிக அளவில் குடமுழுக்கு செய்வதை சாதனையாக கருதுகிறேன். தமிழகத்தில் பெரிய கோவில்கள் மட்டுமின்றி சிறிய கோவில்களுக்கும் குடமுழுக்கு நடத்துவதை இந்த அரசின் சாதனையாக பார்க்கிறேன்"- என்றார். (எ)

# தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலம் தாக்குதல் நடத்த நானே உத்தரவிட்டேன்

## இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு ஒப்புதல்

டெல் அவிவ், நவ. 12

லெபனானில் தீவிரவாதிகளை இலக்கு வைத்து நடத்தப்பட்ட பேஜர், வாக்கி - ரோக்கி தாக்குதலில் இஸ்ரேலுக்கு தொடர்பு உள்ளதை அந்த நாட்டுப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஒப்புக்கொண்டுள்ளார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் லெபனானில் நடந்த தாக்குதலில் 40 பேர் கொல்லப்பட்டனர். 3000இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர். அப்போது, அந்தத் தாக்குதல் குறித்து இஸ்ரேல் மௌனம் சாதித்துவந்தது. இந்த நிலையில் முதன்முறையாக நெதன்யாகு, லெபனான் பேஜர் தாக்குதல் தனது ஒப்புதலுடனேயே நடந்ததாக தெரிவித்தார். இதனை நெதன்யாகுவின் செய்தித் தொடர்பாளர் ஓமர் டோஸ்ட்ரி உறுதி செய்தார்.



இதேவேளை, பெய்ரூட்டில் ஹிஸ்புல்லா தலைவர் ஹசன் நஸ்ரல்லாவை குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலும் தான் ஒப்புதல் வழங்கிய பின்னரே நடந்ததாக நெதன்யாகு கூறியுள்ளார். மேலும், அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றதிலிருந்து அவருடன் 3 முறை பேசினேன் என்றும் நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார். (எ)

### கனடாவில் இந்துக்கள்மீது தாக்குதல்


# காலிஸ்தான் அமைப்பாளர் இந்தர்ஜீத் கோசல் கைது

ஒட்டாவா, நவ. 12

கனடாவில் உள்ள கோவிலில் கடந்த வாரம் இந்துக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் காலிஸ்தான் ஆதரவு போராட்ட அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் இந்தர்ஜீத் கோசலை பொலிஸார் கைது செய்தனர்.

கனடாவின் டொரண்டோ மாகாணத்துக்கு உட்பட்ட பிராம்ப்டன் பகுதியில் இந்து மகா சபைக்குச் சொந்தமான கோவில் உள்ளது. இங்கு, இந்தியத் தூதரகம் சார்பில் இந்தியர்களுக்கு சான்றிதழ் வழங்கும் சிறப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து காலிஸ்தான் ஆதரவாளர்கள் போராட்டம் நடத்தினர்.

அப்போது, இந்துக் கோவிலுக்கு வந்த பக்தர்கள் மீது அவர்கள் திடீர் தாக்குதல் நடத்தினர். காலிஸ்தான் கொடிக் கம்பங்களை வைத்து, பெண்கள், குழந்தைகள் மீது அந்த கும்பல் பயங்கர தாக்குதல் நடத்தியது. இதில் பலர் படுகாயமடைந்தனர்.



இந்தத் தாக்குதலுக்கு கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர். தாக்குதல் நடத்தியவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தியா சார்பில் வலியுறுத்தப்பட்டது.

இந்த நிலையில், தாக்குதல் சம்பவம் தொடர்பில் பீல் மண்டல பொலிஸார் வெளியிட்ட அறிக்கையில், இந்துக்கள் தாக்கப்பட்ட சம்பவத்தில் பிராம்ப்டனைச் சேர்ந்த இந்தர்ஜீத் கோசல் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மீது ஆயுதங்களை வைத்து தாக்குதல் நடத்தியதாக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. பின்னர் ஒரு சில நிபந்தனைகளின் பேரில் அவர் விடுவிக்கப்பட்டார். ஒன்டாரியோ நீதிமன்றத்தில் கோசல் முன்னிலைப்படுத்தப்படுவார்- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# இன்டர்போல் உதவியை நாடும் பங்களாதேஷ் அரசு

டாக்கா, நவ. 12

மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகள் தொடர்பில் பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா மீது ஏராளமான வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த நிலையில் அவரை கைது செய்ய இன்டர்போல் - சர்வதேச பொலிஸாரின் உதவியை பங்களாதேஷ் அரசு நாடியுள்ளது.

பங்களாதேஷில் இட ஒதுக்கீட்டுக்கு எதிராக கடந்த ஜூன் மாதம் முதல் ஒகஸ்ட் மாதம் வரை தீவிர போராட்டம் நடைபெற்றது. பிரதமர் ஷேக் ஹசீனா பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் எதிர்க்கட்சியினர் தொடர்ந்து போராடினர். போராட்டக்காரர்களுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இந்த வன்முறை மற்றும் மோதல்களில் ஏராளமானோர் கொல்லப்பட்டனர்.

நாட்டில் நிலைமை கைமீறி சென்ற நிலையில், பிரதமர் ஷேக் ஹசீனா பதவி விலகியதுடன் இந்தியாவில் தஞ்சமடைந்தார். இந்த நிலையில் ஷேக் ஹசீனா மற்றும் தப்பியோடிய பிற நபர்களை நாட்டுக்கு கொண்டு வர இன்டர்போலின் உதவியை நாடப்போவதாக பங்களாதேஷ் இடைக்கால அரசாங்கம் அறிவித்துள்ளது.



இன்டர்போல் மூலம் விரைவில் சிவப்பு அறிவித்தல் வெளியிடப்படும் என்றும், தப்பியோடியவர்கள் உலகில் எங்கு மறைந்திருந்தாலும், அவர்கள் மீண்டும் அழைத்து வரப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் சட்ட ஆலோசகர் ஆசிப் நஸ்ருல் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# ஒருநாள் தொடரை வென்று பாகிஸ்தான் அணி சாதனை

## சொந்த மண்ணில் சொதப்பியது ஆஸி.

மெல்பேர்ண், நவ. 12

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரில் பாகிஸ்தான் 2 - 1 என்ற கணக்கில் வெற்றி பெற்று தொடரைக் கைப்பற்றியது. 22 ஆண்டுகளுக்குப் பின்னர் அவுஸ்திரேலியாவில், பாகிஸ்தான் அணி ஒரு நாள் தொடரை வென்று சாதனை படைத்துள்ளது.

அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் விளையாடியது.

முதல் 2 போட்டிகளில் 2 அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றிபெற்று சமநிலையில் இருந்தன. இந்த நிலையில், தொடரை கைப்பற்றுவது யார் என்பதை முடிவு செய்யும் முக்கியமான 3ஆவது ஒருநாள் போட்டி பெர்த் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் பாகிஸ்தான் 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று தொடரை 2 - 1 என்ற கணக்கில் கைப்பற்றியது. முதலில் விளையாடிய அவுஸ்திரேலிய அணி 31. 5 ஓவர்களில் 140 ஓட்டங்களுக்கு சுருண்டது. மத்தியூ ஷார்ட் 22, ஜேக் பிரேசர் - மெக்குர்க் 7, ஆரோன் ஹார்டி 12, ஜோஷ் இங்லிஸ் 7, கூப்பர் கனோலி 7, மார்க்கஸ் ஸ்ரொய்னிஸ் 9, கிளென் மேக்ஸ்வெல் 0, சீன் அபோட் 30, அடம் ஸம்பா 13, ஸ்பென்ஸர் ஜோன்சன் 12 ஓட்டங்கள் சேர்த்தனர்.

பாகிஸ்தான் தரப்பில் ஷஹின் ஷா அப்ரிடி, நசீம் ஷா ஆகியோர் தலா 3, ஹரீஸ் ரவூப் 2, ஹஸ்னைன் ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

பின்னர் 141 ஓட்டங்கள் என்ற எளிதான வெற்றி இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 26. 5



ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 143 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. பாகிஸ்தான் அணியில் அதிகபட்சமாக சலீம் அயூப் 40 ஓட்டங்கள் குவித்தார்.

அப்துல்லா ஷபீக் 37, பாபர் அஸாம் 28, முகமது ரிஸ்வான் 30 ஓட்டங்கள் எடுத்தனர். அவுஸ்திரேலியா அணி தரப்பில் லான்ஸ மோரீஸ் 2 விக்கெட்கள் வீழ்த்தினார். இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை 2 - 1 என்ற கணக்கில் பாகிஸ்தான் அணி கைப்பற்றி வரலாற்று சாதனை படைத்துள்ளது.

இதற்கு முன்பு கடைசியாக 2002ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவில் நடந்த இருதரப்பு ஒருநாள் தொடரை 2 - 1 என்ற கணக்கில் பாகிஸ்தான் வென்றிருந்தது.

22 ஆண்டுகளுக்குப் பிறகு அவுஸ்திரேலிய மண்ணில் அந்த அணியை பாகிஸ்தான் அணி வீழ்த்தி சாதனை படைத்துள்ளது. (எ)

## 2ஆவது ரி - 20 போட்டியில் தென்னாபிரிக்கா வெற்றி

கெபேஹா, நவ. 12

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது ரி - 20 போட்டியில் தென்னாபிரிக்கா 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்தியா - தென்னாபிரிக்கா இடையிலான 2ஆவது ரி - 20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணியின் தலைவர் மார்க்ரம் பந்துவீச்சை தெரிவு செய்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, தென்னாபிரிக்க பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் சீரான இடைவெளியில் விக்கெட்களை இழந்து திணறியது. ஹர்திக் பாண்டியா பொறுப்புடன் விளையாடியதால் இந்திய அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்களை இழந்து 124 ஓட்டங்கள் என்ற கௌரவமான நிலையை எட்டியது.

இதனையடுத்து 125 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்கை நோக்கி களமிறங்கிய தென்னாபிரிக்க அணிக்கு இந்திய சுழற்பந்து வீச்சாளரான வருண் சக்கரவர்த்தி சீரான இடைவெளியில் விக்கெட்களை வீழ்த்தி கடும் நெருக்கடி கொடுத்தார். இருப்பினும்

தென்னாபிரிக்க தரப்பில் ஒருபுறம் விக்கெட் விழுந்தாலும் டிரிஸ்டன் ஸ்டப்ஸ் பொறுப்புடன் விளையாடி அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்து சென்றார். இறுதி கட்டத்தில் அவருடன் ஜோடி சேர்ந்த ஜெரால்ட் கோட்ஸி (9 பந்துகளில் 19 ஓட்டங்கள்) அதிரடியாக விளையாடி அழுத்தத்தை குறைத்தார்.

19 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்களை இழந்த தென்னாபிரிக்கா 128 ஓட்டங்கள் அடித்து வெற்றி பெற்றது. அதிகபட்சமாக ஸ்டப்ஸ் 47 ஓட்டங்கள் அடித்து அணி வெற்றி பெற உதவினார். இந்தியா தரப்பில் அதிகபட்சமாக வருண் சக்கரவர்த்தி 5 விக்கெட்கள் கைப்பற்றி அசத்தினார். இந்த வெற்றியின் மூலம் 4 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடர் 1 - 1 என்ற கணக்கில் சமநிலையை எட்டியது. (எ)

### பட்லர் அதிரடி ஆட்டம்:

## 7 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி வெற்றி



பார்படாஸ், நவ. 12

பட்லரின் அதிரடி துடுப்பாட்டம் மூலம் இங்கிலாந்து அணி இரண்டாவது ரி - 20 போட்டியில் 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி மேற்கு இந்திய தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 5 ரி - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற ஒருநாள் தொடரை 2 - 1 என்ற கணக்கில் மேற்கு இந்திய தீவுகள் அணி கைப்பற்றியது. இதையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான ரி - 20 தொடர் நடைபெற்று வருகிறது. முதல் ரி - 20 போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றது.

இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது ரி - 20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்படி முதலில் களமிறங்கிய மேற்கு இந்திய தீவுகள் அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 158 ஓட்டங்கள் எடுத்தது. அணித் தலைவர் ரோவ்மேன் பவல் அதிகபட்சமாக 43 ஓட்டங்கள் எடுத்தார்.

இதையடுத்து 159 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணி, 14. 5 ஓவர்களிலேயே வெற்றி இலக்கை கடந்தது. இதன் மூலம் 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. ஜோஸ் பட்லர் அதிரடியாக விளையாடி 83 ஓட்டங்கள் எடுத்தார். இந்த வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி 5 போட்டிகள் கொண்ட தொடரில் 2 - 0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. (எ)

# இலங்கை - நியூசிலாந்து ரி - 20 தொடர் சமநிலை

தம்புள்ளை, நவ. 12

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட நியூசிலாந்து கிரிக்கெட் அணி 2 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடியது. இதில் முதல் போட்டியில் இலங்கை வெற்றி பெற்றிருந்தது. இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது மற்றும் கடைசி போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் நாணயச்சுழற்சியில் வென்ற இலங்கை பந்து வீச்சை தெரிவு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, இலங்கை அணியின் அபார பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் 19. 3 ஓவர்களில் 108 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இலங்கை தரப்பில் அதிகபட்சமாக வனிந்து ஹசரங்க 4 விக்கெட்களும், பத்திரண 3 விக்கெட்களும் வீழ்த்தினர்.

இதனையடுத்து 109 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை எளிதில் வெற்றி பெறும் என்று அனைவரும் எதிர்பார்த்தனர். ஆனால், பெர்குசன் மற்றும் கிளென் பிலிப்ஸ் ஆட்டத்தின் போக்கையே மாற்றி விட்டனர்.

இலங்கை தரப்பில் தொடக்க வீரர் பதும் நிஸ்ஸங்க மட்டும் தனி ஆளாக வெற்றிக்கு போராடினார். ஆனால், மறுமுனையில் அவருக்கு ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. நியூசிலாந்து பந்துவீச்சாளர்கள் சீரான இடைவெளியில் விக்கெட்களை வீழ்த்தினர்.

கடைசி ஓவரில் இலங்கை அணியின் வெற்றிக்கு 8 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் கைவசம் 3 விக்




கெட்கள் இருந்தன. அந்த ஓவரை கிளென் பிலிப்ஸ் வீசினார். களத்தில் அரைச்சதம் அடித்த நிஸ்ஸங்க இருந்தார். இதனால் இலங்கை பக்கமே வெற்றி வாய்ப்பு அதிகமாக இருந்தது.

ஆனால், அந்த ஓவரில் வெறும் 2 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்த பிலிப்ஸ் எஞ்சிய 3 விக்கெட்களையும் கைப்பற்றி நியூசிலாந்துக்கு திரில் வெற்றியை பெற்றுக்கொடுத்தார். இந்தப் போட்டியில் 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற நியூசிலாந்து ரி - 20 தொடரை 1 - 1 என்ற கணக்கில் சமன் செய்தது.

# டெஸ்ட் தொடரில் பங்கேற்கும் பங்களாதேஷ் அணி அறிவிப்பு

டாக்கா, நவ. 12

மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ள பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அணி மேற்கு இந்திய தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இதன்படி இவ்விரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி வரும் 22ஆம் திகதி தொடங்கவுள்ளது.

இந்த நிலையில் இந்தத் தொடருக்கான பங்களாதேஷ் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. நஜ்மூல் ஹொசைன் ஷாண்டோ தலைமையிலான அந்த அணியில் முன்னணி வீரரான முஷ்பிகுர் ரஹீம் காயம் காரணமாக இடம்பெறவில்லை. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சத்தமின்றி...

ராய் வக்னின் இலங்கை வந்து திரும்பியமை தொடர்பான விடயமும் இரகசியமாகவே பேணப்பட்டள்ளது.

ராய் வக்னின் இஸ்ரேலின் பாதுகாப்பு உயர் அதிகாரியாகவும் பின்னர் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## படைகளுக்கு...

குமார திஸநாயக்க யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார். நான் அறிந்த வரையில் அரசியல் கைதிகள் 52பேர் தடுப்புக் காவலில் உள்ளனர்.

முக்கியஸ்தர்கள்மீதான தாக்குதல், தற்கொலை குண்டுத் தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களின் அடிப்படையில் சட்ட மாஅதிபரின் ஆலோசனைக்கு அமைய வழக்குகள் முன்னெடுக்கப்படுகின்றன.

நாட்டின் பாதுகாப்பு குறித்து மக்கள் நன்கு அறிவர். ஆகையால் அரசியல் கைதிகள் தொடர்பில் வழக்குகளை முன்னெடுப்பதா அல்லது விடுதலை செய்வதா என்பதை ஆராய வேண்டும்.

மேலும், வடக்கில் இராணுவம் வசமுள்ள காணிகளை விடுவிப்பதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது. நாம் கடந்த காலங்களில் காணிகளை விடுவித்தோம். இராணுவத்தினரது தேவைக்கான காணிகளே தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றை விடுவிப்பது தொடர்பில் அவதானம் தேவை - என்றும் கூறினார். (ஐ)

## நான்கு பொலி...

என்றும் , குறித்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை யாழ்ப்பாணம் தலைமை பொலிஸ் நிலையத்துக்கு விசேட இடமாற்றம் செய்வதாகவும் பொலிஸ் தரப்பு தகவல் தெரிவித்தன.

சுன்னாகம் பொலிஸார் விபத்து ஒன்று இடம்பெற்ற பகுதிக்கு சென்று அங்கிருந்த பெண்கள் உட்பட பலர் மீது கொடூர தாக்குதல் மேற்கொண்டதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தன. இவ்வாறான பின்னணியிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த பொலிஸ் நிலையத்தின் புதிய கட்டடத்தை திறந்து வைப்பதற்காக பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய வருகை தந்து சென்ற சில மணி நேரத்தில் இந்த சம்பவம் நடைபெற்றுள்ளது.

இந்த சம்பவத்திற்கு பல்வேறு தரப்பினரும் தமது கண்டனங்களை தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 46 நாட்களில்...

பொறுப்பேற்று 46 நாட்களுக்குள் வெளிநாட்டுத் தலைவர்கள் , அமைச்சர்கள் ,இராஜ தந்திரிகள், சர்வதேச மற்றும் வலய நாடுகளின் அதிகாரிகள் என 50 இற்கும் அதிகமானவர்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் மற்றும் அமெரிக்கா, சீனா, ரஷ்யா, ஜப்பான், சவுதி அரேபியா, ஜேர்மன், கனடா, தென்னாபிரிக்கா உள்ளிட்ட நாடுகளின் தூதுவர்களை அமைச்சர் சந்நதித்து கலந்துரையாடியுள்ளார்.

அதேபோன்றுவெளிநாட்டு இராஜ தந்திரிகள், ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச நாணய நிதியம் , ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்டோரையே அமைச்சர் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்புக்களின் போது இலங்கைக்கான ஒத்துழைப்பை வழங்க தாம் தயாராகவுள்ளதாக உறுதிப்பாட்டையும் வெளிவிகார அமைச்சர் விஜித ஹேரத்திற்கு வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## த. தே. ம. முன்னி...

ஆனால், அதேசமயம் தேசிய மக்கள் சக்தியினரும் ஈ. பி. டி. பியினரும் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டுள்ளனர். எதங்களை மட்டும் ஏன் தடுக்கிறீர்கள் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் பொலிஸாருடன் முரண்பட்டுள்ளனர். இதைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

எனினும், பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் விடயத்தில் தலையிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரை பரப்புரையில் தொடர்ந்தும் ஈடுபட வழியேற்படுத்தினார். இதைத் தொடர்ந்து நிலைமை சுமுகமானது. (ஐ)

## பிள்ளையானை...

வருமாறு அவருக்கு சி. ஐ. டியினர் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

பிரிட்டனின் சனல் -4 தொலைக்காட்சி ஒளிபரப்பிய ஆவணப்படத்தில் பிள்ளையானின் செயலாளர் அவருக்கு எதிராகத் தெரிவித்த தகவல்கள் தொடர்பான விசாரணைக்காகவே அவர் இன்றைய தினம் சி. ஐ. டியினரால் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் பிரிட்டனின் சனல் 4 தொலைக்காட்சி ஆவணப்படம் ஒன்றை ஒளிபரப்பியிருந்தது. "இலங்கையின் உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புகள்", என்ற தலைப்பில் கடந்த 2023 செப்ரெம்பர் 6ஆம் திகதி அந்த ஆவணப்படம் ஒளிபரப்பாகியிருந்தது.

அதில், பிள்ளையானின் முன்னாள் செயலாளர் ஆசாத் ஹன்சீர் மௌலானாவும் சாட்சியம் அளித்திருந்தார். இந்த ஆவணப்படம் தொடர்பில் அமைப்பு ஒன்று பொது பாதுகாப்பு அமைச்சிடம் முறையான முறைப்பாடு ஒன்றை சமர்ப்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த முறைப்பாடு பொலிஸ் தலைமையகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு மேலதிக விசாரணைக்காக குற்றப் புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழரின்...

தமிழ்த் தலைவர்கள் தன்னோடு எந்த விடயத்திலும் கலந்துரையாடுவதில்லை. அதனால் தற்போது பஸ் சென்றுவிட்டது. இனி யாருடைய தயவும் தேவையில்லை. அந்த பஸ் ஓடும் என்று கூறியிருக்கின்றார்.

இந்த நேரத்தில் நான் ஒரு விடயத்தை கூற விரும்புகின்றேன். ஜே. வி. பி. இந்த பாராளுமன்றத்தில் அதிக ஆசனங்களை பெற்றுக் கொள்ளாது. அந்த நேரத்திலே ஓடுகின்ற பஸ்ஸை நிறுத்தி ஆளுமையுள்ளவர்களை ஏற்றிச் செல்லவேண்டிய நிலைமை அவருக்கு ஏற்படும். அவ்வாறு தான் அவர் இந்த அரசாங்கத்தை கொண்டு செல்லக்கூடியதாக இருக்கும்.

தற்போது ஜனாதிபதி அரசியல் கைதிகளை விடுதலை செய்வேன் என்று கூறி இருக்கின்றார். இதிலிருந்து அவர் தமிழ் மக்களுடைய வாக்குகளை கபளீகரம் செய்வதற்கான அரசியல் நாடகமொன்றை நடத்துகின்றார் என்பது தெரிகிறது.

ஜனாதிபதியை பொறுத்தவரை பொது மன்னிப்பின் அடிப்படையிலேயே கைதிகளை விடுதலை செய்வதற்கான அதிகாரம் இருக்கின்றது. ஆனால் இவரும் கடந்த ஜனாதிபதிகள் போன்று அரசியலுக்காக கருத்துக்களை கூறுவதாகத்தான் இருக்கின்றது.

ஜனாதிபதி நினைத்தால் தற்போதும் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய முடியும். இந்த தேர்தல் முடிந்ததன் பின்னர் தான் விடுதலை செய்ய வேண்டும் என்கின்ற தேவை இல்லை. ஆகவே அரசியல் கைதிகள் விடயத்தில் அவர் தமிழ் மக்களின் வாக்குகளை சுவீகரிப்பதற்கான அரசியல் நாடகத்தை அரங்கேற்றுகிறார் - என்றார். (அ)

# தேர்தல் முறைப்பாடுகள் 2,811ஆக அதிகரித்தன!

கொழும்பு, நவ. 12

எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பில் நேற்று முன்தினம் வரை 2 ஆயிரத்து 811 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு ஆயிரத்து 968 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 788 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 20 முறைப்பாடுகளும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 35 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அமைச்சர் விஜித ஹேரத் திடீர் விஜயம்!

கொழும்பு, நவ. 12

சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானங்களின் தாமதம் தொடர்பில் கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகள் குறித்து ஆராய அமைச்சர் விஜித ஹேரத் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இந்த விஜயத்தின்போது, விமான நிலையத்தின் அனைத்துப் பிரிவுகளையும் பார்வையிட்ட அமைச்சர், அந்தந்த பிரிவு ஊழியர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடினார் எனக் கூறப்படுகிறது.

24 மணி நேரமும் விமானம் தாமதம் ஏற்படுவது தொடர்பில் பயணிகளுக்கு உடனடித் தகவல்களை வழங்கவும், தாமத காலத்தில் பயணிகளுக்கு அதிகபட்ச வசதிகளை வழங்கவும் விமான நிலையம் மற்றும் சிறிலங்கன் எயார் லைன்ஸை பிரதிநிதித்துவப்படுத்தும் விசேட பிரிவு ஒன்று விமான நிலைய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் விஜித ஹேரத் இதன்போது தெரிவித்தார்.

அதேநேரம், இந்த காலதாமதங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தல் வழங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# "இலங்கை தமிழ் அரசு கட்சி இன்று செயலிழந்து விட்டது"

யாழ்ப்பாணம், நவ. 12

இலங்கை தமிழ் அரசுக் கட்சி பிரிந்து பிரிந்து செயலிழந்து விட்டது. இந்நிலையில், தற்போது அந்தக் கட்சிக்கு தமிழ் மக்கள் வாக்களித்தால் சுமந்திரனே தெரிவாவார் என்று ஜனாதிபதி சட்டத்தரணி கே. வி. தவராசா தெரிவித்தார்.

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில்,

சுமந்திரன் கட்சியின் தேசிய பட்டியலில் உள்வாங்கப்பட்ட பின்னர் கஜேந்திரகுமார், சிவகரன், சிற்றம்பலம், அருந்தவபாலன், அனந்தி, விக்னேஸ்வரன் எனப் பலரும் வெளியேறினர்.

மக்களுடைய தமிழ்த் தேசியத்தை மூலதனமாக்கி விட்டு அந்தக் கட்சியினர் பொருளாதாரத்தை பார்க்கின்றனர். மாவை சேனாதிராஜாவும் சிறீதரனும் செயலிழந்துவிட்டனர் - என்றார்.

## இடது கை...

தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை விளக்கினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இடது கையின் சிறிய விரலுக்கு மை பூசினோம். பலருக்கு இன்னும் மை அடையாளங்கள் உள்ளன. எனவே, இம்முறை இடது கையின் ஆள்காட்டி விரலை குறியிட தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது-என்றார். (அ)

## வடக்கு, கிழக்கு...

மாற்றத்தை பற்றி பலர் சொல்கின்றனர். அநுர குமார திஸநாயக்க வெற்றி பெற்றதை வைத்து இதனை பலர் கூறுகின்றனர். மார்க்ஸிஸ லெனினிச கொள்கைகளை பேசும் ஒருவர் ஆட்சியில் ஏறியமை மாற்றம்தான். ஆனால், தமிழ் மக்களுக்கு ஒரு பிரச்னை இருக்கிறது. அதிகார பரவலாக்கம் தேவை என்ற விடயங்களை அநுர குமார திஸநாயக்க தரப்பு ஏற்பதாக தெரியவில்லை.

பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என வலியுறுத்திய அநுர குமார திஸநாயக்க தற்போது அதை திருத்தி பயன்படுததலாம் என தற்போது சொல்கின்றனர். தமிழ் மக்கள் இம்முறை சிந்தித்து ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியை பலப்படுத்த வேண்டும். சங்கு வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் உண்டு. யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் 2 அல்லது 3 ஆசனங்கள் கிடைக்கும் - என்றார். (ஐ)

## சுமந்திரனிடம்...

ஏற்பட்டது.

அந்த சமயத்தில் அங்கு நின்ற பொலிஸார் சமரச முயற்சியில் ஈடுபட்டனர். தொடர்ந்து, கேள்விகளை எழுப்ப முயன்றவர்களை அவ்விடத்திலிருந்து வெளியேற்றினர். இதேசமயம் சுமந்திரனின் ஆதரவாளர்கள் அவரை பாதுகாப்பாக அழைத்துச் சென்று வாகனத்திலேற்றி அனுப்பி வைத்தனர். (ஐ)

## புதிய அமைச்சர...

சபாநாயகர் தேர்வு உள்ளிட்ட சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர், அன்றைய தினமே புதிய அமைச்சரவை பதவியேற்கவுள்ளது என்று அறியமுடிகின்றது.

25 அமைச்சுகள் மற்றும் அமைச்சுகளுக்கான அரச நிறுவனங்கள் என்பன தற்போது ஒதுக்கப்பட்டு இறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

25 இற்கும் 30 இற்கு இடையில் பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள். இராஜாங்க அமைச்சு பதவிகள் நீக்கப்பட்டுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# திட்டமிட்ட ரீதியில் அரிசி தட்டுப்பாடு!

## ஆலை உரிமையாளர்கள் மீது குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 12

அரிசி ஆலை உரிமையாளர்கள் அநேகமானோர் திட்டமிட்ட செயற்கையான முறையில் அரிசி தட்டுப்பாட்டை உருவாக்கியுள்ளதால் தற்போது சில பிரதேசங்களில் அரிசி விலை உச்சம் தொட்டுள்ளதாக நுகர்வோர் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

இவ்வாறான செயல்களில் ஈடுபடும் அரிசி ஆலை உரிமையாளர்கள் நாட்டரிசி விநியோகத்தை கடந்த 8ஆம் திகதி தொடக்கம் நிறுத்தியுள்ளதாகவும் தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரிசி தொடர்பில் ஏற்பட்டுள்ள நிலையை அவதானத்தில் கொண்டு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க மூலம் அறிக்கை ஒன்று அழைக்கப்பட்டபோதிலும் இந்நிலையில் மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை.

எதிர்வரும் சில வாரங்களில் பண்டிகைக் காலம் ஆரம்பிப்பதால் அரிசிக்கான கேள்வி அதிகரித்துள்ளது.

அதன்படி, அரிசி தட்டுப்பாட்டை உருவாக்கி அரிசி விலையை உயர்த்துவதற்கு ஒரு சில தரப்பினர் முயற்சி செய்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறான பின்னணியில், கீரிச் சம்பா அரிசி கிலோ ஒன்றின் கட்டுப்பாட்டு விலையை 260 ரூபாயாக நிர்ணயித்துள்ள நிலையில் ஒரு சில பிரதேசங்களில் 360 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதனால் விற்பனை குறைவடைந்ததால் ஒரு கிலோ கீரிச் சம்பா அரிசியை தற்போது 260 ரூபாய்க்கு விற்க அரிசி ஆலை உரிமையாளர்கள் முன்வந்துள்ளனர்.

நாட்டு அரிசிக்கான கேள்வி சந்தையில் அதிகரித்துள்ளதால், அதன் விலையை அதிகரிக்க நாட்டு அரிசிக்கான தட்டுப்பாட்டை உருவாக்கியுள்ளதாக அரிசி விற்பனையாளர்கள் குற்றம் சுமத்தி வருகின்றனர். நாளாந்தம் அரிசிக்கான அவசியத்தில் சுமார் 70 வீதம் நாட்டு அரிசிக்கு வழங்கப்படுகிறது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரிசி தட்டுப்பாடானது அரிசி ஆலை உரிமையாளர்களால் திட்டமிட்டு செயற்கையாக உருவாக்கப்பட்டது என விவசாய சங்கங்கள் குற்றம் சுமத்துகின்றன.

இவ்வாண்டின் மார்ச், பெப்ரவரி மாதங்களில் மற்றும் செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களில் கிடைத்த அறுவடை அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் வரையில் அரிசித் தேவையை பூரணப்படுத்த போதுமானதாக இருக்கும் என குறித்த சங்கங்கள் கூறுகின்றன. (அ)

## போலி கடவுச்சீட்டு மூலம் நாடு திரும்பியவர் கைது

கொழும்பு, நவ. 12

போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி நாட்டுக்கு வருகை தந்த இலங்கைப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்று திங்கட்கிழமை கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபர் லண்டனிலிருந்து நேற்றுக் காலை 05.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

இதன்போது விமான நிலை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கொண்டு வந்த கடவுச்சீட்டு போலியானது என தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் கடந்த 2004 ஆம் ஆண்டு சட்டவிரோதமாக மன்னாரிலிருந்து படகு மூலம் இந்தியாவுக்குத் தப்பிச் சென்று பின்னர் அங்கிருந்து போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இங்கிலாந்துக்குத் தப்பிச் சென்று தலைமறைவாக இருந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலைய குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். (அ)

## கைத்துப்பாக்கி காட்டி மிரட்டிய உபபொலிஸ் பரிசோதகர் கைது

கொழும்பு, நவ. 12

தனது தந்தையை தாக்கிய அயலவர்களுக்கு கைத்துப்பாக்கியை காட்டி கொலை மிரட்டல் விடுத்த உப பொலிஸ் பரிசோதகர் கைது செய்யப்பட்டுள்ளதாக ஆனமடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் ஆனமடுவ தர்மபால பிரதேசத்தை சேர்ந்த கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவில் கடமையாற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ஆவார்.

உப பொலிஸ் பரிசோதகரின் தந்தையை அவரின் அயலவர்கள் கடந்த 7ஆம் திகதி அன்று பலமாக தாக்கியுள்ளனர்.

இதனையடுத்து, சந்தேக நபர் தனது அயல் வீடுகளுக்கு சென்று அவர்களிடம் கைத்துப்பாக்கியை காட்டி கொலை மிரட்டல் விடுத்து தாக்குதல் நடத்தினாரெனபொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆனமடுவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## லொஹானின் பிணை மனு விசாரணை நவம்பர் 19இல்



கொழும்பு, நவ. 12


முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, பிணையில் விடுதலை செய்யுமாறு கோரி தாக்கல் செய்த மனுவை எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு பரிசீலிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தீர்மானித்துள்ளது.

மிரிஹான பகுதியில் உள்ள வீடொன்றில் பதிவு செய்யப்படாத கார் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதன்படி, முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் பிணையில் விடுவிக்கக் கோரி தாக்கல் செய்த மனுவை பரிசீலித்த நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் ஷஷி மகேந்திரன் ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

அன்றைய தினம், இந்த மனு தொடர்பான உண்மைகளை தெரிவிக்குமாறு சட்டமா அதிபர் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்புமாறு மனுதாரருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ)

## ஜனாதிபதியின் யாழ்.கூட்டத்துக்காக பஸ்களில் அழைத்துவரப்பட்ட மக்கள்!



யாழ்ப்பாணம், நவ. 12

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசார கூட்டத்துக்காக பல மாவட்டங்களில் இருந்து பஸ்களில் பொதுமக்களை ஜனாதிபதி கொண்டுவந்தார் என இலங்கை தமிழ் அரசுக் கட்சி வேட்பாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களை பஸ் மூலம் யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவந்து அவர்களுக்கு உரையாற்றினார் என சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ள சுமந்திரன், அந்த மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு ஜனாதிபதி சென்று அவர்களுடன் உரையாடியிருக்கலாம் அதனால் செலவும் குறைவு எனவும் கூறியுள்ளார்.

அநுரகுமாரவின் யாழ்.தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்ட சிங்கள மக்களுக்கு தமிழ் மொழி பெயர்ப்பு வழங்கப்பட்டது எனவும் சுமந்திரன் தெரிவித்துள்ளார். (அ)

## சுஜீவவின் சொகுசு வாகனத்தை பறிமுதல் செய்யுமாறு உத்தரவு!

கொழும்பு, நவ. 12

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க பயன்படுத்திய கறுப்பு வீ 8 ரக சொகுசு ஜீப்பை பறிமுதல் செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சி. ஐ. டியினரால் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று பரிசீலிக்கப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட வாகனத்தை அரச சோதனையாளருக்கு மேலதிக பரிசோதனைக்கு அனுப்ப நீதிமன்றம் அனுமதி அளித்தது. (அ)

## சிறுவர் மத்தியில் மீண்டும் வைரஸ்!

கொழும்பு, நவ. 12

சிறுவர்களுக்கு மத்தியில் காய்ச்சல் அதிகரித்து வருவதாக ரிட்ஜ்வே ஆர்யா சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

ஏறக்குறைய மூன்று நாட்களுக்கு காய்ச்சல் நீடித்தால் அது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமென அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அண்மைய நாட்களாக குழந்தைகளுக்கு வைரஸ் காய்ச்சல் அதிகரித்துள்ளது. இது இருமல் மற்றும் சளியுடன் கூடிய காய்ச்சலாகும். மேலும், டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது.

எனவே, இருமல், சளி, காய்ச்சல், உடல்வலி, வாந்தி இருந்தால் வைரஸ் காய்ச்சலுக்கான அறிகுறியாகும். எனவே, மூன்று நாட்களுக்கு மேல் காய்ச்சல் இருந்தால், உரிய இரத்தப் பரிசோதனை செய்து கொள்ளுங்கள்-என்றார். (அ)

## மதுபானசாலைகள் இரு நாள்கள் பூட்டு

கொழும்பு, நவ. 12

பொதுத் தேர்தல் காரணமாக நாட்டிலுள்ள அனைத்து மதுபானசாலைகளும் 14 ஆம், 15 ஆம் திகதிகளில் மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி பொதுத்தேர்தல் காரணமாகவும், 15 ஆம் திகதி பௌர்ணமி தினத்தை முன்னிட்டும் மதுபான சாலைகளை மூட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த தினங்களில் அனுமதிச்சட்டத்தை மீறும் மதுபான சாலைகள் மற்றும் ஏனைய சட்டவிரோத செயல்பாடுகள் தொடர்பில் சட்டத்தை கடுமையாக நடைமுறைபடுத்துமாறு மதுவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்கிடையில், நிலுவையில் உள்ள மதுபான உரிமங்களை புதுப்பிப்பதற்கு வருமான வரியை செலுத்தாத நிறுவனங்களுக்கு இம்மாதம் 30ஆம் திகதி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. (அ)

## 2025 ஜனவரியில் உள்ளூராட்சி சபை தேர்தல்!

கொழும்பு, நவ. 12

உள்ளூராட்சி சபைத் தேர்தல் 2025 ஜனவரி மாதம் நடைபெறவுள்ளதென தெரிய வருகின்றது.

பாராளுமன்றத் தேர்தலுக்கு பின்னர், உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்குரிய ஏற்பாட்டுப் பணிகளில் தேர்தல் ஆணைக்குழு இறங்கவுள்ளது.

உள்ளூராட்சி தேர்தலுக்கு 800 கோடி ரூபாய்க்கும் அதிகமாக செலவாகும் என முன்னர் மதிப்பிடப்பட்டது.

இந்நிலையில் புதிய மதிப்பீடு அடங்கி கணக்கறிக்கையை தேர்தல் ஆணைக்குழு, விரைவில் திறைசேரிக்கு அனுப்பி வைக்கவுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.11.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org